www.tamilarangam.net

# சமர்

இதழ் - 3



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உள்ளே :


1. உயிர்நாடன் சமர் -03

2. வயிற்றுப்பிழைப்பு -08

3. திரை -09

4. மாசகர்களும் நாசிகளும் -11

5. மோகாயத்தி யூனியன் -20

6. இது ஒரு [வாதுமான] காதல் -47

7. விசிலடிக்கும் பரம்பரை
மீண்டும் விசிலடிப்பதில்... -49

8. காத்திருப்பு -52

9. அவள் எழுந்து வாட்டாள் -53

10. பாராளுமன்றக் கனவுகள் -54

11. ஒரு பதிவுக்காக... -68

12.. புலம் பெயர்ந்தவர்கள்
பற்றி புலிகள்... -72

www.tamilarangam.net

# உங்களுடன் சமர்

## தேவை!

உலகெங்கும் தாராளமயம் நடக்கும் சம-யங்கள் மனிதகுலத்தின் வாழ்நிலையைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. 2ம் உலகயு-த்தத்தின் பின்னர் ஏகாதிபத்தியங்களால் தமது சுரண்டல் நோக்கங்களுக்காக ஒழு-ங்கமைக்கப்பட்ட உலகம் இப்போது மறு-படி ஒழுங்கமைக்கப்படுகிறது. சோவியத் ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சி, ஐரோப்பிய ஏகாதிபத்தியத்தின் வலு இணைக்கப்பட்ட ஐரோப்பாவின் ஆதிக்கம் அமெரிக்காவின் இருப்பு என்று அதிகார வர்க்கங்கள் மனித குலத்தைப் பாதித்துக் கொண்டிருக்கின்றன. உலகின் வறிய நாடுகளைப் பங்கு போட்டு கொள்வதற்கு ஏகாதிபத்தியங்களிடையான போட்டி உக்கிரமடைந்துள்ளது. வாழ்வுக்கும் சாவுக்கும் இடையான மானுடம் போரா-டிக்கொண்டிருக்கிறது. போராட்டங்களை-யும், கிளர்ச்சிகளையும், பயங்கரவாதத்-தையும் விளைவாக்கிக் கொண்டு, திசை அறியாமல் தேசங்கள் தவித்துக் கொண்டு இருக்கின்றன எங்கும் நடப்பதை தெளி-வதற்கான ஒரு கண்ணோட்டத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏதும் காணமுடியவில்லை.

இந்த நிலையில் நமது எதிர்காலம் என்ன? நாங்கள் என்ன செய்யப்போகிறோம்? சமூகத்தில் அக்-கறையுள்ள எவரது மனதையும் விடைகண்டாக வேண்டிய கேள்வி இது! இந்த நிகழ்வுகளுக்காக மனம் நொந்து கவிதைகளும் சிறுகதைகளும் எழுதிக் கொட்டிக் கொண்டிருப்பது தானா எமது பணி? ஆரோக்கியமாக இருக்-கின்ற சமூக உணர்வுள்ள முற்போ-க்குச் சக்திகள். இயக்கி முன்னால் உள்ள வரலாற்றுப் பணி, கவிதை (?) 'வடிப்பது' தான் என்று நினைத்துக் கொண்டிருக்கி-றார்கள் போலும். 1917 ரஷ்யப்புரட்சி முடிந்த பாடு, சீனாவை வழிநடத்திச் செல்வதற்காக மாவோ சேதுங் ரஷ்ய புரட்சியின் சித்தாந்தத்தில் ஒளிந்து மறைப்பட்ட அந்த காலகட்டத்திற்குரிய புதிய சிந்தனைகளை முன்வைத்தார். வர்-க்கங்களின் அணி சேர்க்கையில் வேறு-பாடுகளை முன்வைத்தார். அதுவே புதிய ஜனநாயகப் புரட்சி என்றார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்றைய ஈழ நிலைமை

அரசியல் நிலை என்பன தொடர்பான
தெளிவான ஆய்வொன்றோடு, போரை
பாதிப்பற்ற வகையில் முன்வைக்கப்பட்ட
நந்திவர்மன் அடிப்படையில் போராட்டம்
வெற்றி வரை வழிநடத்தப்பட்டது. ஆனால்
ஈழத்தில் போராட்டம் பற்றி சிந்தனை
-கள் வரவேற்பற்றிய உணர்வுகள்
இருந்தும் ஆயுதக்கலாச்சாரம் மனித
உயிர்கள் பலிகொள்ளப்பட்ட பாதிப்பும்
கூட ஈழத்தின் அரசியல் நிலைமை, தொட-
-ர்பாகவோ போராட்டத்தின் தோல்விகள்
தொடர்பாகவோ பொதுவாக யாரும் சிந்
-தித்ததாக தெரியவில்லை. கவலைக் கதை
மத்தியில் போலும் இயக்கங்கள் பற்றியும்
அரச பற்றியும், கடுமையான கண்டனமும்
கவலையும்....! சில வேளைகளில் 'வெடி
-குண்டுப் புரளி' போல அவ்வப்போது
சில கருத்துகள் ஐக்கிய இலங்கைப்
புரட்சி, கவலை என்கின் என்ன? கவலை
மக்களுக்கென்றோ, ராஜீவ் கொலை மன்றா
-ட்டமன்றது.... இப்படி விளக்கங்கள்.
இவ்வாறு ஈழப்போராட்டம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பற்றிச் சிந்திக்கின்ற பெரும்பாலானவர்கள்
மத்திய தர வர்க்கத்திலிருந்து வந்த இளை-
-ஞர்களே. அவர்கள் ஒரு கருத்தைப்பற்றி
சிந்திப்பதில்லை. மேலாக அந்தக் கருத்-
-துக்குப் பின்னாலுள்ள ஒரு அமைப்பு இயக்-
-கம் பற்றிய மேலோட்டமான முடிவுக்கு
வருவார்கள். இதுவே எமது முடிவாக்கிக்
கொண்டு.... யாரும் கருத்தும் கதைக்கலாம்?

எமது போராட்டம் சீரழிக்கப்பட்டு
-விட்டது. மக்கள் துப்பாக்கிகளுக்கும்
வெடிகுண்டுகளுக்கும் நடுவே சாவுடன்
யுத்தம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.
தென்னாசிய முழுவதையும் புரட்சியால் வீச்சை
வழியாக்க வல்ல எமது போராட்டம் ஏன்
சீரழிந்து போனது? கொலைகளையும், சிறுவர்களை
-யும் பலிக்குள்ளாக்கிப் போனதேனோ?
இது மட்டும் தானா எமது தேவை? மக்களின்
கரங்களில் ஆயுதம் தேவை. சித்தாந்த
ஆயுதம்! நிராயுதபாணிகளான அந்த
மக்களை இன்றைக்கு பாசிசம் ஆட்சி
செய்கிறது.

தேவையானது இப்பொழுதே இது
பற்றி வரிக்கு வரி தெளிவாக்கிடுதாம்.

www.tamilarangam.net

ஆனால் ஜனநாயகவாதப் பல ஊடகங்கள் தமது பொதுவாக வைக்கும் இதுபற்றிய பொறுப் -புடன் கருத்தில் எடுத்துக் கொண்டதாக தெரியவில்லை. ஜனநாயகம், மனிதம், பண்பாடு, சகிப்பு என்று சமூகம் பற்றி நிறையப் பேசிக்கொள்கிற ஐரோப்பிய பத்திரிகைகள் சில கத்தோலிக்க பாதிரியார்கள் தொடர் -பாகவும் பொறுப்புடன் கருத்தில் கொண் -டால், எமது போராட்டத்திற்கும் ஊடகப் -படுக்கின்ற பெரிய இடைவெளியை கணிசமானளவு நிரப்ப முடியும். நமது தேசத்தில் மறுக்கப்படுகின்ற கருத்துச் சுதந்திரம் இங்கே ஓரளவு கிடைக்கின் -றது. அதனைப் பயன்படுத்திக் கொண்டு இதனை பயனுள்ள கால -மாக்கிக் கொள்ள முடியும்.

— ஆசிரியர் குழு —

அட்டைப்படம் :
கணேஷ்

www.tamilarangam.net

# வயிற்றுப்பிழைப்பு

சுபத்திரன் என்ற கவிஞன் பற்றியும் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சி பற்றியும், ஈ.பு.தியின் வரலாறு குறித்து அக்கறையுள்ள எந்த மனிதனும் கேள்விப்படாமல் இருக்க முடியாது. இச்-சாமம் என்ற கிராமத்தில் ஈ.பு.தியின் முதல் பெண் ஆயுதப்போராளி ஜெயலக்ஷ்மி என்பவள் இந்த போராட்டத்தில் பங்கே-ற்றதை யாரும் மறுக்கமுடியாது. இந்த போராட்டத்தின் பெயரைக் கூறிக்கொண்டு சுபத்திரனைப் பற்றியும் பேசிக் கொண்ட V.T. இளங்கோவன் என்பவரது கவிதை தொகுப்பு 05.01.92 அன்று பாரிஸில் வெளி-யிடப்பட்டது. L.T.T.E இன் பரிஸ் பொறு-ப்பாளர் திலகர், இன்னும் L.T.T.E இன் புடை சூழ இவ்வெளியீட்டு விழா நடந்தது. அரசியல் தஞ்சம் கோரும் சுமபூர்களின் "கேஸ்" எழுதிப் பிழைப்பு நடத்தும் காரண-ம்பிள்ளை மாஸ்டரின் அனுசரணையுடன் வெளிவந்த இந்த தொகுப்பு வெளியீட்டு விழாவின் போது இளங்கோவனின் இரங்க உரை புதுவை ரத்தினதுரையின் இன்றைய புதுமும்

1948 பக்கம் பார்க்க...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இரை

●

அவன் காயத்தின் மேல்.........
அடித்துக்கொண்டே இரு!
அது குணமாக விடாதே!
அந்த வலி
ஓயாமல் புதுரத்தும் கக்கிக்கொண்டே இருக்க வேண்டும்
குடல்களிலே வேதனை எப்போதும்
குடியிருக்க வேண்டும்

அவன் தப்பிக்கப் பார்த்தால்
அவன் ''குற்றம் புரிந்தவன்''
என்று கூவு!
அவன் மறக்கவே கூடாது
கறுத்த மண்ணை முகத்தில் வீசி அடி.
அவன் வார்த்தைகளில்—பூக்கள்
பூக்கத் தொடங்குமேயானால்
செத்த பிணங்களின் கைகளைப் போல்
வெளிறிப் போகும்படி நசுக்கு!

அழித்து நிர்மூலமாககு,
அழித்து நிர்மூலமாக்கு.
இதயத்திற்குள்ளே அவன்
பூட்டி வைத்திருக்கின்ற இசையை
வெளியிட அனுமதிக்கக் கூடாது
இதுவே உனது சட்டம்
என்னுடையதற்கு எதிரானது;

www.tamilarangam.net

ஆற்றின் அலைகள் நிலவுடன் பேசமுயன்றால்
மலைகளால் சுவர் எழுப்பு!
தனது உயரத்தை மறந்து
ஒரு சிறுவனுக்காக
நட்சத்திரம் கீழிறங்கி வந்தால்......
வானக் குடும்பத்தின் முன்—அதைக்
குற்றவாளி ஆக்கு!

புள்ளிமான் ஒன்று
சுதந்திர நீரைக் குடிக்கும்போது
நாயைப் போல் கட்டிப்போடு

ஏதாவது ஒரு மீன்—
நீரின்றி வாழக் கற்க விரும்பினால்
அதனைக் கரையிலும் மண்ணிலும்
அனுமதிக்காதே

எந்தக் கரங்களாவது
சந்தோஷத்தைக் கனவில் கண்டு
காற்றைத்தடவ முனைந்தால்—அவைகளைத்
துண்டு துண்டாக்கு!
விடியல்—மிகுந்த ஒளியுடன்
புலருமானால்

இருட்டு வாட்களை—அதன்
கண்களில் சொருகு!
எங்காவது
காற்றே இதமாகக்கொண்ட மனிதன் இருந்தால்
காலோடு தலையாய்ச்சேர்த்துக் கட்டி
நீரில் அமிழ்த்து!

—மார்க்கோஸ் அநா
ஸ்பெயின் நாட்டுக் கவிஞர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாசகர்களும் நாங்களும்

நித்தியினது அரசியல் செயற்பாடுகள் தொடர்பான உங்கள் முடிவு அல்லது நிலைப்பாடானது மக்களின் அடிப்படை உரிமைகளான கருத்து, எழுத்து, பேச்சுச் சுதந்திரத்திற்காக போராடுதல் என்ற உங்கள் முதலாவது கோஷத்திற்கு இன்றைய நிலையில் முரணானது என நான் புரிந்து கொள்வதால் எனது ஆதரவை மீளாய்விற்கு உட்படுத்த வேண்டி இருப்பதால் எனது கவிதை அல்லது எழுத்துகள் இருப்பின் உங்களிடமிருந்து திரும்பப் பெற்றுக் கொள்கின்றேன்.

- சுகன்.

நட்புடன் சுகனுக்கு,

சமர் ஆசிரியர் குழுவுக்கு

நீங்கள் எழுதிய கடிதம் கிடைத்தது. எழுத்து மூலமான பதிலினைத் தர தாமதித்து விட்டோம் மன்னிக்கவும்.

எமக்கு உங்களின் நிலைப்பாடு சம்பந்தமாக விளக்கமில்லாமல் உள்ளது.

'சமர்' ஆசிரியர் குழு சார்பாக நாம் உங்களுடன் திரு. நித்தியானந்தன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர்கள் பாரிய வாக்குறுதிகளை முன் வைத்தோமா?

அவ்வாறு இல்லாத பட்சத்தில்,

'சமர்' என்பது மக்களின் அடிப்படைச் சுதந்திரமான கருத்து எழுத்து, பேச்சு சுதந்திரங்களுக்காக போராடும் 1வது கொள்கைக்கிணங்க இன்றைய நிலையில் முழுமை பெறப்படுவதாக குறிப்பிடுகின்றீர்கள். உங்களது இலக்கும் தொடர்பாகவே.

'சமர்' திரு. நித்தியானந்தன் சம்பந்தமாகக் கொண்டுள்ள வாதத்தை முன்வைக்கின்றது. திரு. நித்தியானந்தன் அவர்களது அரசியல் செயற்பாடுகள் தொடர்பிலே சமர் இடையூறானது அல்ல. ஆனால் சமரின் 3வது நிலையான குறிப்-பிட்டிருந்த மக்களின் கருத்து, எழுத்து பேச்சு சுதந்திரங்களுக்காகப் போராடும் நிலைப்பாட்டில் திரு. நித்தியானந்தன் அவர்களுடன் இணைந்து செயற்படுதல் எனும் விடயத்திலேயே சமர் ஒரு திட-மான நிலைப்பாட்டுடனுள்ளது.

திரு. சத்தியநாதன் அவர்கள் ஆரம்ப காலங்களில் இருந்தே L.T.T.E உறுப்பினர் சிறைப்பிடிக்கப் பட்டவர் L.T.T.E இன் பத்திரிகை ஆசிரியராகவும் இருந்துள்ளார்.

மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகள் யாவும் மறுக்கப்பட்டு மக்கள் நடைப்பிணங்களாக்கப்பட்டு வந்த நிலையானது L.T.T.E இன் ஆரம்ப காலந் தொட்டே அத்திவாரமிடப்பட்டு வந்ததொன்றாகும்.

L.T.T.E ஆனது அதன் ஆரம்பம் தொட்டே எம் தேசத்தின் ஜனநாயகத்தின் குரல்வளையை நெரித்து வருகிறது. இவ்வேளை இவரது ஆயுதம் ஏந்திய போராட்டம் எம் இனம் சிறுபிள்ளைகளுக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் திரு. சத்தியநாதன் அவர்களுக்குமா தெரியாதிருந்திருக்கலாம் என நம்பச் சுமன் நினைக்கின்றோ? என எண்ண வேண்டியுள்ளது. திரு. சத்தியநாதன் அவர்களை வீட்டு கடத்தப்பட்ட கொழும்பிலே அண்மையில் கூட திரு. சத்தி-



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

-த்தியானந்தன் அவர்களிடம் "நீ யார்?" எனக் கேட்டது நம் எல்லோரது காது-களையும் வருத்தியது. இது நண்பர் சகலரின் காதுகளையும் வருத்தியிருக்கும் என நம்புவோம்.

திரு. சித்தியானந்தன் அவர்களது கடந்த கால அரசியல் வாழ்வில் பலவீனங்கள், சந்தேகங்கள் இல்லை என அவர் வாக்காளர்களுக்கு அறியப் பட்டவராக இருக்கும் தமிழ்த் தலைவர் சில வேளைகளில் நண்பர் சந்தேகித்து இருக்கலாம். ஆனால் எமக்கு அத்த-கைய நிலைப்பாடுகள் மீது நம்பிக்கை இல்லை.

இலங்கையின் நிலைப்பாடு

திரு. சித்தியானந்தன் அவர்களது கடந்த காலம் மீது வாக்காளர்களின் சந்தேகங்கள் எழுவது தவிர்க்க முடி-யாததொன்று. அவரின் கடந்த கால அரசியல் வாழ்வுக் காலங்களில் அவரினால் ஜனநாயக மறுப்புக்கு எதிராக உள்ளிருந்துகொண்டே போரா-

www.tamilarangam.net

-டியிருக்கலாம். அல்லது மௌனித்து / மௌனிக்க வைக்கப்பட்டிருக்கலாம். அல்லது ஆதரித்திருக்கலாம் என்றும் கேள்விகள் எழுவது கூட தவிர்க்க முடியாததல்லவா? எனவே தான் "சமர்" இணைந்து செயற்படுதல் என்றும் விடயத்தில் விமர்சனம், சுயவிமர்சனம் என்பவற்றிற் கூடாக முரண்பாடுகளை சந்தேகங்களை விளக்கங்களை தெளிவு படுத்திக் கொண்டு செயல்பட நினைக்-கின்றது.

இவ்விமர்சன நிலைப்பாடானது எந்த ஒரு தனிமனிதனதோ அல்லது சமூகத்தினதோ அடிப்படை ஜனநாயக உரிமைகளை மறுப்பதாக அமையாது. அவ்வாறு இல்லை என நண்பர் சுகன் நினைப்பாராக இருந்தால் அதனுடன் இணைந்து விரிவான பதிலினை "சமர்" எதிர்பார்க்கின்றது.

— ஆசிரியர் குழு —

"அரசியல் அனாதைகளின் ஜனநாயகப் படுகொலை" என்ற பிரசுரம் கிடைத்தது. நன்றி. நீங்கள் குறிப்பிட்டது போன்று விமலேஸ்வரனின் கொலையைக்

www.tamilarangam.net

கண்டிப்பதற்கு மற்ற இயக்க அனுதாபிகள் தவறியமை வன்மையாகக் கண்டிக்கப்படுவது சரி. ஆயினும் இவ்வாறான கண்டனத்தை முன் வைக்கும் போது அது எவ்வாறு முன் வைக்கப்படுகின்றது. என்பதிற் கூடிய கவனஞ் செலுத்தியிருப்பின், நீங்கள் எதிர்பார்த்த அரசியற் தாக்கத்தை உண்டாக்குவது-டன் ஏற்படக் கூடிய சில தவறான வியாக்கியா-னங்களையும் தவிர்த்திருக்கலாம்.

வாக்கியங்கள் அமைந்துள்ள முறையில் பத்மநாபா, உமாமகேஸ்வரன், ஸ்ரீசபாரத்தினம் என்போர் துரோகிகளானமையால் அவர்களது கொலைகளைக் கண்டிப்பது முக்கியமில்லை என்ற தொனி தென்படுகின்றது. இது உங்கள் நோக்க-மில்லை என்று உணுகின்றேன். குறிப்பிட்ட நபர்கள் துரோகிகளா இல்லையா என்ற வாதத்தில் நான் இப்போது இறங்கவில்லை. அவர்கள் துரோகிகளாகவே இருந்தார்களாயினும் கூட அவர்களது கொலை கண்டனத்திற்குரியது. அவர்களது மரணங்கள் அவசியமின்றிக் கொலைக் குள்ளாகும் பலரது மரணங்கள் போன்று வருந்தத்-திற்குரியன. விமலேஸ்வரனின் கொலையைக் கண்டிக்கவும் அவரை நினைவு கூரவும் மறுப்போர் கண்டனத்திற்குரியோராவர். விமலேஸ்வரனை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேண்டுமென அவர்கள் நினைவு கூராமைக்கு அரசியல் நோக்கமிருப்பின் அவ்வரசியல் பிழைபாடுடையது. மறைந்த விமலேஸ்வரனை ஒரு முக்கியமான அரசியற் தலைவராக அவர்கள் கருதாமையாலோ அவரது பணிகளை உணராமையாலோ அப் புறக்கணிப்பு நிகழ்கின்றதெனின் அவர்கட்கு விமலேஸ்வரன் பற்றி விளக்கி அவர்களை வென்றெடுப்பது சரியானது.

உங்களது பிரசுரம் உங்களுடன் உடன் படுவோர்க்கானதெனின் அதில் உள்ள பிழைகளையும் மீறி அவர்கள் உங்கள் நோக்கத்தை உணரக்கூடும். அத்தகையோருக்கு இவ்வாறன பிரசுரம் புதிய அறிவு எதையும் தர மாட்டாது. எனவே அவர்களது ஆத்ம திருப்திக்கு மேலாக அவர்கட்கு அதனாற் பயனிராது. மற்றோருக்காகவெனின், அவர்கள் உங்கள் பகைவரல்லாத பட்சத்து அவர்களை வென்றெடுக்கும் முறையில் எழுதுவது பொருந்தும்.

எதிரியின் எதிரி நண்பன் என்றோ எதிரியின் நண்பன் எதிரி என்றோ எளிதான மந்திரங்கள் இல்லை. எனினும் எதிரி அல்லாத எவனும் நண்பனாகக் கூடும் என்ற முனைப்புடன் செயற்படுவதன் மூலமே நாம் நம்மைப் பலப்படுத்தி எதிரியைப் பலவீனப்படுத்த முடியும். அதற்கான என் வாழ்த்துக்கள்.

— சிவசேகரம்.

www.tamilarangam.net

ஒரு தேசவிடுதலைப் போராட்டக் காலகட்டத்தில் மக்கள் எனப்படுவர்கள் யார் என்ற ஒரு மகத்தான தத்துவார்த்தப் பார்வை தொடர்பாக "முரண்பாடு பற்றி" என்ற நூலில் மாவோ தெளிவாக குறிப்பிட்டிருக்கிறார். மக்கள் மத்தியிலுள்ள தவறானப்பார்வைகளையும் மக்கள் அல்லாத ஒரு வர்க்கத்தினுடைய பார்வைகளையும் ஒரே பார்வையிலிருந்து நாம் பார்க்க முடியாது. இந்த நிலையில் "மக்கள் யார்", "துரோகிகள் யார்" என்று தீர்மானிப்பது என்பது ஒரு பக்கப் பார்வை ஆனால் எந்த வகையிலும் ஒரு தேசவிடுதலை போராட்ட காலகட்டத்தில் அதிகார வர்க்கத்தின் பக்கத்திலும், ஏகாதிபத்தியத்தின் பக்கத்திலும் சார்ந்து நிற்கின்ற எந்த சக்திகளையும் "மக்கள்" என்ற வரையறைக்குள் அடக்கி விட முடியாது. இந்த வகையில் தான் நாம் குறிப்பிட்ட பத்மநாபா, உமாமகேஸ்வரன், சிறி சபாரத்தினம் போன்ற நபர்களை பார்க்கிறோம். "மக்கள்" என்ற வரையறைக்குள் அடக்கமுடியாத இந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நாட்டின் வெவ்வேறு சமூகத்தினரிடையேயும்,
மக்கள் மத்தியிலேயும் அகற்றுவது
என்பது ஒரு குறித்த பாரிசுமை ஆகும்.
அதுபற்றி இங்கு நாம் விவாதிக்கவில்லை.
ஆனால், இவ்வாறான நபர்கள் தூக்கிலிடப்படாமல்
உள்ள உள் முரண்பாடுகள் காரணமாக
அழிக்கப்படும் போது அவர்களுடைய
இழப்பு அநாவசியமானது என்றோ அல்லது
அதற்காக ஒப்பாரி வைப்பதோ தேவை-
-யற்றது ஆகும். மேலும் ஒரு உயிரின்
கொலைக்காக கண்ணீர் வடிக்கும். ஆன்மிக
வாதத்தின் அந்த மனிதாபிமான தன்மை
வாய்ந்திருக்கிறோம். இப்போது 'தூவாய்ப்புலி'
நடைமுறையும் தொடர்புபடுகின்ற 'ராஜீவ்'
கொலை தொடர்பான ஆக்ரோஷமான ஆனால்
அநாவசியமான வாதங்கள் தொடர்-
-பாகவும் எமது கருத்து இதுவே!

-ஆசிரியர் குழு-

8ம் பக்க தொடர்ச்சி...

L.T.T.E பத்திரிகையாளர் கூட நடவடிக்கையும்
வந்து போயின. சுபத்திரன் பெயரையும்
வெளியிடமுடியுமா?



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சோவியத் யூனியன்

– ஒரு பார்வை

முன்னெப்போதும் இல்லாதவாறு உலகம் முழுவதும் போராட்டங்களையும், கிளர்ச்சிகளையும், அழிவுகளையும் சந்தித்துக் கொண்டிருக்கின்றது. நாகரீகம் வளர்ந்து விட்டதாகப் பறைசாற்றப்படுகின்ற இந்த நூற்றாண்டில் 'மனிதம்' செத்துப் போய்ப் பிணவாடை வீசுகின்றது. நிறவெறியர்கள், இனவெறியர்கள், மதவெறியர்கள் என்று வேட்டைக் கும்பல்கள் தமது கோரப்பற்களை மனித குலத்தின் மீது பதிக்க ஆரம்பித்து விட்டன. ஒவ்வொருவரின் மனதிலும் பயம், ஏக்கம், ஆதங்கம்! நாளைய எதிர் காலம் பற்றிய கேள்விக்குறி! மனித குலம் தனது விடுதலைக்கான ஒரு வழியைத் தேடிக் கொள்ள வேண்டிய அவசர-த்தேவையை இவை உணர்த்தி நிற்கின்றன. இந்த வழி என்ன? மனிதகுல விடுதலைக்கான தத்துவம் என்ன? 'சமதர்மம்' நிலவியதாகக் கூறப்பட்ட சோவியத் யூனியன் சிதறிச் சின்ன-பின்னமாகிப் போய்விட்டது. வியட்நாம், சீனா,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கியூபா, நிக்கரகுவா இப்படி எதுவுமே நம்பிக்கை-யற்றுப் போய்விட்டன. இந்தத் தோல்விகளு-க்கான காரணம் என்ன? நாளை நாங்கள் என்ன செய்யப் போகின்றோம்? நிச்சயம் இவை தொடர்பான ஆய்வுகள் தேவை. அதுவும் செய்திகளைக் கூடியளவு சேகரித்துக் கொள்ளக் கூடிய ஐரோப்பியச் சூழல் ஒன்றில் வாழ்கின்ற ஒவ்வொரு சமூகப் பற்றுள்ள மனிதனதும் கடமையாகும். இது தொடர்பான ஆய்விற்கு ஒரு வழியைத் திறந்து விடும் நோக்கிலேயே இந்தக் கட்டுரை அமைகின்றது. மாறாக இது ஒரு ஆய்வு அல்ல.

மனிதர்கள் வரலாற்றைப் படைப்பதி-ல்லை. வரலாறே மனிதர்களைப் படைக்கின்றது. ஆனால் வரலாற்றின் குறித்த கட்டங்களில் ஒரு தனி மனிதனுக்கு ஒரு எல்லை வரையான பாத்திரம் இருந்ததுண்டு. இந்த வகையில் ரஷ்யப் புரட்சி வரலாற்றில் லெனின், ஸ்டாலின், ட்ரொஸ்கி ஆகிய நபர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். ஆனால் சோவியத் யூனியனின் புரட்சிக்குப் பிந்திய ஆய்வை எங்கிருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொடங்குவது? என்று கேட்டால்,
ஸ்டாலினிலிருந்தே தொடங்குவது உகந்தது.
ஸ்டாலினைப் பற்றியதும், ஸ்டாலின் காலகட்டம்
பற்றியதுமான விமர்சனம் என்பது இந்த
ஆய்விற்கான வழியைத் திறந்து வைக்கும் என
நம்புகின்றேம்.

ஸ்டாலின் தொடர்பாக இரண்டு
வகையான போக்குகள் பொதுவாக நிலவுகின்றன.

(I) கண்மூடித் தனமான ஸ்டாலின் வழிபாடு.

(II) ஸ்டாலினை முற்றாக நிராகரித்தல்.

இந்த இரண்டு வகையான போக்கும் அடிப்படையிலும் அடிப்படையாகத் தவறானவையாகும். முதலாவதாக ஸ்டாலின் மீது எந்தத் தவறும் இல்லை. அப்படித் தவறு செய்திருந்தாலும் அது தவிர்க்க முடியாததும், பாதிப்பற்றதுமான தவறு என்று சொல்லப்படுவது தாராளவாத வகைப்பட்டதாகும். ஸ்டாலின் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் பதவியை ஏற்ற காலத்திலிருந்தே ஸ்டாலின் மீதான தவறுகள் கம்யூனிஸ்ட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கட்சியின் உறுப்பினர்களாலும் குறிப்பாக லெனினாலும் விமர்சிக்கப் பட்டவையாகும். 1898 இலிருந்து கட்சி உறுப்பினரான ஸ்டாலின் 1912 போல்ஷ்விக் கட்சியின் மத்திய கமிட்டி உறுப்பினரானார். தேசிய இன விவகாரங்களிலும், ராணுவ விவகாரங்களிலும் முக்கிய பங்கு வகித்தவர். தேசிய இனப்பிரச்சினை தொடர்பான தத்துவார்த்தக் கட்டுரை எழுதியதன் மூலம் கட்சியினதும் லெனினதும் வெகுவான பாராட்டைப் பெற்றவர். தேசிய இன விவகாரக் கமிஸாராக 1917 இல் இருந்து 1923 வரை இருந்தவர். 1922 இல் கட்சியின் மத்திய கமிட்டிப் பொதுச் செயலாளராக இருந்தவர். ஸ்டாலின் பொதுச் செயலாளர் பதவியை ஏற்றதில் இருந்து 1924 இல் லெனின் இறந்து போகும் வரை, லெனினால் நடைமுறைப் பிரச்சினைகளுக்காக கடுமையாக விமர்சிக்கப் பட்டார். 1953 இல் ஸ்டாலின் இறந்து போன பிறகு ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியானது முழுமையாகத் திரிபுவாதத்திற்குள் மூழ்கிப் போனது. ஸ்டாலினிற்குப் பிறகு தலைமையை ஏற்றுக் கொண்ட

www.tamilarangam.net

குருஷேவ்வும் அவருடைய கும்பலும் புரட்சிக்காலத்தில் முக்கிய பங்கு வகித்த--வர்களல்ல.

புரட்சிக்காலத்தில் கட்சியின் முக்கிய பங்கு வகித்த புகாரின், பியத்கோவ் போன்ற இன்னும் பல தலைவர்கள் ஸ்டாலின் மறைவுக்கு முன்னரே கட்சி விரோதச் செயல்களிற்காக கட்சியிலிருந்து நீக்கப்பட்டு விட்டனர். இவை எல்லாம் சடுதியாக நிகழ்ந்த திடீர் நிகழ்ச்சிகளல்ல. ஸ்டாலினின் பங்கும் இதில் கருத்தில் கொள்ளப்பட வேண்டியதே!

ஸ்டாலினிடம் இருந்த தத்துவா--ர்த்தத் தவறு என்ற பக்கத்தில் தேசிய வாதத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தது என்பதே பொதுவாகக் கூறப்படுகின்றது. இது தொடர்பாக சீனக் கம்யூனிஸ்ட் கட்சி சில தடவைகள் விமர்சித்துள்ளது. ஆனால் அன்றைய சர்வதேசிய நிலைமைகளும், தேசிய நிலைமைகளும் இவ்வகையான தேசிய வாதத்தின் தேவையை அதிகப்படுத்தியிருக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாய்ப்புண்டு.

மேலும் தேசிய இனப்பிரச்சனை தொடர்பாகவும், தேசிய சிறுபான்மை இனங்களின் பிரச்சனை தொடர்பாகவும் ஸ்டாலினின் தத்துவார்த்தத் தவறுகள் குறித்துக் காட்டப் படுகின்றன. இந்தப் பிரச்சினைகளில் ஸ்டாலினது நிலை லெனினா-லும் கம்யூனிஸ்ட் கட்சியாலும் முன்னமே அங்கீகரிக்கப்பட்டது என்பதும், 1917 இல் இருந்து ஸ்டாலின் தேசிய இன விவகாரங்-களுக்கான கமிஸாராக இருந்தார் என்பதும் குறிப்பிடத் தக்கது. மேலும், தேசிய இனப்பிர-ச்சனையில் ஸ்டாலினின் தத்துவம் தர்க்கரீதியா-னதும், வரலாற்றுரீதியான அணுகுமுறையுடன் கூடியதுமாகும். இதனை விமர்சிக்க முற்படு-கின்றவர்கள் எவருமே தேசிய இனங்களுக்கான புதிய தத்துவார்த்தக் கருத்துகள் எதையும் இதுவரை முன் வைத்ததில்லை.

'**மனிதம்**' தனது கட்டுரை ஒன்றில் "உடைந்து நொருங்கியிருக்கும் சோவியத் குடியரசுக்கிடையில் புதிய ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கும் முயற்சியில் கோர்பச்சேவ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈடுபட்டுள்ளார். இந்தப் புதிய ஒப்பந்தம், குடியரசுகளுக்கிடையில் முழுமையான சுதந்திரத்தை அங்கீகரிக்கின்றது. அதே சமயம், பொருளாதார மேம்பாடு, உள்நாட்டு, வெளி- -நாட்டு அரசியல் நடவடிக்கைகள், நாட்டின் பாதுகாப்பு ஆகியவற்றிற்கான ஒரு ஐக்கியத்தை வலியுறுத்துகின்றது. இந்த அடிப்படையில் பத்துக் குடியரசுகளை இணைக்கும் முயற்சியில் கோர்பச்சேவ் இறங்கியுள்ளார். இந்த முயற்சி வெற்றி பெறுமாயின், தேசிய இனப் பிரச்சனைக்கு சிறப்பான தீர்வொன்றை எட்டிய முதல் நாடாக சோவியத் யூனியன் திகழும். ஆனால் இன்று வலுத்து வரும் நெருக்கடிகள் கோர்பச்- -சேவின் புதிய யூனியனைக் கட்டிக் காக்குமோ என்பது சிந்தனைக்குரியது."

எனக் குறிப்பிட்டுள்ளது.

தேசிய இனப் பிரச்சனையில் ஒரு தேசிய இனம் தான் சுதந்திரமாகப் பிரிந்து போவதும் சேர்ந்து வாழ்வதும் என்பது அந்த நாட்டின் குறித்த சூழ்நிலைகளிலே தங்கியுள்- -ளது. எனினும், பொதுவாக ஒக்கப்படுகின்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசிய இனம், தனது தேசியத்தை ஏகாதிபத்திய ஆதிக்கத்திலிருந்து விடுவித்துக் கொள்வதை முன்னுறுத்தும் போதே அது ஏற்றுக்கொள்ளப் படக்கூடியதாகவும், தேவையானதாகவும் அமையும். ஆனால் தனது மூலதனச் சுரண்டலை நோக்கமாகக் கொண்டு ஒரு ஏகாதிபத்தியம் தேசிய இனப்பிரச்சனையைப் பயன்படுத்துமாயின் அது அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட முடியாததாகும். ஆனால் சோவியத் யூனியனில் இந்தப் பிரச்சனை ஏகாதிபத்திய நலன்களின் அடிப்படையிலேயே தொடர்ந்தும் கையாளப்-படுகின்றது. எனவே இவ்வகைப்பட்ட தீர்வானது தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்வில் புதிய சிக்கல்களை ஏற்படுத்தும்.

ஆனால் நடைமுறைப் பிரச்சனைகளில் ஸ்டாலின் கடைப்பிடித்த போக்கானது, ஸ்டாலின் மறைவுக்குப் பின் கட்சியைத் திரிபு-வாத நிலைக்குக் கொண்டு செல்வதிலும், ஒரு அதிகாரக் கூட்டம் வளர்வதிலும் பெரும்-பங்கு ஆற்றியிருக்கின்றது.

ஸ்டாலினது நடைமுறைத் தவறுகள்

www.tamilarangam.net

தொடர்பாக லெனின் விமர்சனங்களை முன் வைக்கும் போது, ஸ்டாலினைவிட அதிக சகிப்புத்தன்மையும், அதிக விசுவாசமும், தோழர்களின் பால் அதிக நன்மை பயக்கும் அதிக பரிவுணர்வும், குறைவான தான்தோன்றிப் போக்கும் உடையவரான ஒரு பொதுச் செயலாளரை கம்யூனிஸ்ட் கட்சி பெற வேண்டும் என்றார்.

### 1922 டிசம்பர் 24ஆம் தேதிக் கடிதத்துடன் கூடுதலாகச் சேர்க்கப்பட்டது

ஸ்தாலின் பெரிதும் முரட்டுச் சுபாவமுடையவராய் இருக்கிறார். இந்தக் குறைபாடு நம் மத்தியிலும் கம்யூனிஸ்டு களாகிய நம்மிடையிலான விவகாரங்களிலும் சகித்துக் கொள்ளக் கூடியதே என்றாலும், பொதுச் செயலாளராய் இருக்கும் ஒருவரிடம் சகிக்க முடியாததாகி விடுகிறது. எனவே தான் ஸ்தாலினை அந்தப் பதவியிலிருந்து அகற்றிவிட்டு அவருக்குப் பதில் வேறொருவரை நியமிப்பதற்கான வழி குறித்துத் தோழர்கள் சிந்திக்க வேண்டுமென்று நான் யோசனை கூறுகிறேன். இந்த வேறொருவர் ஏனைய எல்லா விதத்திலும் தோழர் ஸ்தாலினிடமிருந்து, ஒரேயொரு அனு கூலமுடையவராய் இருப்பதில் மட்டுமே—அதாவது, அதிகச் சகிப்புத் தன்மையும், அதிக விசுவாசமும், தோழர்கள் பால் அதிக நன்னயப் பாங்கும் அதிகப் பரிவுணர்வும், குறைவான தான்தோன்றிப் போக்கும், இன்ன பிறவும் உடையவராய் இருப்பதில் மட்டுமே—வேறுபடுகிறவராக இருத்தல் வேண் டும். இந்த விவரம் கவனியாது ஒதுக்கப்பட வேண்டிய சிறு விவரமாகத் தோன்றலாம். ஆனால் பிளவுக்கு எதிரான காப்பு நடவடிக்கைகளின் கண்ணோட்டத்திலும், ஸ்தாலினுக்கும்

www.tamilarangam.net

திரோத்ஸ்கிக்கும் இடையிலான உறவுநிலை குறித்து மேலே நான் எழுதியதன் கண்ணோட்டத்திலும் இது சிறு விவரமல்ல, தீர்மானகரமான முக்கியத்துவம் பெறக் கூடிய சிறு விவரமாகும்.

லெனின்

இந்த நோக்குநிலையிலிருந்து நிலைப்பாட்டுப் பிரச்சினையில் ஸ்தாலினையும் திரோத்ஸ்கியையும் போன்ற மத்தியக் கமிட்டி உறுப்பினர்களே பிரதான காரணக் கூறுகளாய் இருப்பதாய் நான் நினைக்கிறேன். பிளவு ஏற்படும்படியான அபாயத்தில் பெரும் பகுதி இவர்கள் இடையிலான உறவுகளிலிருந்தே எழுகிறதென்று நினைக்கிறேன். இந்தப் பிளவு தவிர்க்கப்படக் கூடியதே. ஏனைய பலவற்றுடன்கூட மத்தியக் கமிட்டி உறுப்பினர்களது எண்ணிக்கையை 50 அல்லது 100ஆக அதிகமாக்குவதானது என் அபிப்பிராயத்தில், இந்த நோக்கம் ஈடேற உதவியாய் இருக்கும்.

தோழர் ஸ்தாலின் பொதுச் செயலாளராகி விட்டதால் அவர் கையில் வரம்பு கடந்த அதிகாரம் குவிந்திருக்கிறது. இந்த அதிகாரத்தை எப்போதும் அவர் போதுமான எச்சரிக்கை உணர்வுடன் பயன்படுத்தக் கூடியவரா என்பது குறித்து நான் உறுதியாகச் சொல்வதற்கில்லை. மறு புறத்தில், தோழர் திரோத்ஸ்கி தனிப்பட வேறுபடுத்திக் காட்டப்படுவது—போக்குவரவு மக்கள் கமிசாரகம் பற்றிய பிரச்சினையில், மத்தியக் கமிட்டியை எதிர்த்து அவர் நடத்திய போராட்டம் நிரூபித்திருப்பது போல்—உன்னதச் செயலாற்றலால் மட்டுமல்ல. தற்போதைய மத்தியக் கமிட்டியில் தனிப்பட்ட முறையில் அவரே யாவரிலும் வல்லமை வாய்ந்தவர் எனலாம். ஆனால் அவர் அளவுக்கு மீறிய தன்னம்பிக்கையை வெளிப்படுத்தியிருக்கிறார், பணியின் முழுக்க முழுக்க நிர்வாகத் தன்மையதான தரப்பில் அளவு மீறி மூழ்கிவிடுகிறவராகவும் தம்மைக் காட்டிக் கொண்டிருக்கிறார்.

தற்போதைய மத்தியக் கமிட்டியின் இரண்டு சிறந்த தலைவர்களது இவ்விரு இயல்புகளும் மனமறியாத முறையில் பிளவுக்கு இட்டுச் சென்றுவிட முடியும். நம் கட்சி இதைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளாவிடில், இந்தப் பிளவு எதிர்பாராத விதத்தில் வந்து நேரலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஸ்தாலினது அவசரமும் மற்றும் தூய நிர்வாகத்துடனான அவரது மோகமும் பகிரங்கமான ''சோஷலிஸ்டு-தேசிய வாதத்தினை'' எதிர்த்த அவரது வன்மமும் சேர்ந்து இங்கு பேராபத்தான ஒரு பாத்திரத்தை வகித்துள்ளன என்று நான் கருதுகிறேன். அரசியலில் வன்மம் பொதுவாக மிகவும் இழிந்ததான பாத்திரமே வகிக்கிறது.

மத்தியக் கமிட்டியின் இளம் உறுப்பினர்கள் குறித்துப் பேசுகையில், புஹாரினையும் பியத்தக்கோவையும் பற்றிச் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். என் கருத்துப்படி அவர்கள் (யாவரிலும் இளையவர்களில்) தலைசிறந்தவர்கள். அவர்கள் குறித்து, பின்வருவதை மனதில் கொண்டாக வேண்டும்: புஹாரின் கட்சியினது மதிப்பு மிக்க ஒரு பிரதான தத்துவார்த்தி மட்டுமன்றி, கட்சி அனைத்தின் அபிமானத்துக்கு உரியவராய் நியாயமாகவே கருதப்படுகிறவரும் ஆவார்; ஆனால் அவரது தத்துவார்த்தக் கருத்தோட்டங்களைப் பெரிய நிபந்தனை வரையறைகளுக்கு உட்பட்டே முழு அளவுக்கு மார்க்சியக் கருத்தோட்டங்களாக வகைப்படுத்த முடியும்,' ஏனெனில் பண்டிதப் புலமைவாதம் வாய்ந்த ஏதோ ஒன்று அவரிடம் காணப்படுகிறது (இயக்கவியலை அவர் எந்நாளும் ஆய்ந்தறிந்ததில்லை, எந்நாளும் அதைப் பூரணமாக உணர்ந்தவரல்ல என்று நினைக்கிறேன்).

வி. இ. லெனின்

ஸ்டாலினது இவ்வாறான தான் தோன்றிப் போக்குகள், கம்யூனிஸ்ட் கட்சியின் பல முக்கியமான, உணர்வு பூர்வமான போராளி--களைப் பலி கொண்டதோடு மட்டுமன்றி, ஸ்டாலின் மறைவுக்குப் பின் குருஷேவ் தலைமை-யிலான திரிபுவாதக் கும்பல் வளர்ந்து இக்கும்பல் கைகளில் ஆட்சியதிகாரமே சென்றடைந்தது. இது சடுதியாக நிகழ்ந்த திடீர் நிகழ்ச்சியல்ல. ஸ்டாலினது நீண்டகாலத் தலைமைத்துவத்தின் ஒரு விளைவே!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் இந்த சந்தர்ப்பங்களில் ஏற்பட்டிருந்த மிகப்பெரிய உள்நாட்டு எதிர்ப் புரட்சி யுத்தங்களும், ஏகாதிபத்திய நாடுகளின் தாக்குதல்களும், சோவியத் சந்தித்திருந்த மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியும் ஸ்டாலினது இந்தப் போக்கை மேலும் ஊக்கப்படுத்தியது எனலாம். இது தவிர, இதற்கான பொறுப்பு ஸ்டாலின் என்ற தனிநபரை மட்டுமல்ல மொத்தக் கம்யூனிஸ்ட் கட்சியையுமே சார்ந்ததாகும்.

மறுபுறத்தில் உலகப்பாட்டாளி வர்க்கத்திற்கு ஸ்டாலின் ஆற்றிய சேவையும், ஸ்டாலினது தத்துவங்களும், இரண்டாம் உலகப் போருக்கு முற்பட்ட காலப் பகுதியில், ஏகாதிபத்தியங்களை விட 100 ஆண்டுகள் பின் தங்கியிருந்த சோவியத் தொழில் துறை, கிட்டத்தட்டக் குறுகிய காலத்தில், ஏகாதிபத்தியங்களுடன் போட்டி போடுகின்ற அளவுக்கு வளர்ந்தது. முப்பதிற்குப் பிந்திய கால கட்டங்களில் சோவியத்தின் தொழில் துறை, ஏகாதிபத்தியங்களைத் திகைக்கும் அளவிற்கு வளர்ந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலகத்தில் முதன் முதலாக ஒரு நாட்டில் மார்க்சிஸத்தின் பொதுவான தத்துவங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. சமுகத்தில் இருந்த பகை முரண்பாடுகள் அழிக்கப்-பட்டு சோஷலிசம் கருக்கட்டத் தொடங்கி-யிருந்தது. இந்த நிலையில் உலகம் மறுபடி ஒரு அழிவைச் சந்தித்தது. இரண்டாம் உலகயுத்தம் அரங்கேறியது. இந்த நிலையில் 2 அவுன்ஸ் பாண் மட்டுமே உணவாக உட்கொண்டிருந்த சோவியத் மக்களின் மிகப் பெரும் தியாக யுத்தம், ஸ்டாலின் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியால் நடத்தப்பட்டது.

இந்த மக்களின் அளப்பரும் தியாகங்-களினால் மட்டுமே உலகம் அழிவின் விளிம்பிலி-ருந்து இழுத்தெடுக்கப்பட்டது. இந்தக் கட்டத்-தில் சோவியத் பொருளாதாரம் இராணுவமயமா-னதாக்கப்பட்டது. நாட்டின் அனைத்துச் செயற்பாடுகளும் இராணுவத் தன்மை கொண்ட-தாக்கப்பட்டது. தேசத்தின் ஒழுங்கமைப்பு முழுவதுமே ஒரு இராணுவ ஒழுங்கமைப்புக்கு ஒத்திருந்தது. இந்த நிலையில் கட்சி, அனைத்-தையும் நிர்வகிக்கும் ஒரு அமைப்பாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மாற்றப்பட்டது. இதனால் கட்சியையும் நாட்டையும் நிர்வகித்த ஸ்டாலினது கைகளில் மொத்த அதிகாரங்களும் குவிந்து போனது. இந்த நிலையில் லெனினால் முன்னமே விமர்சிக்கப்பட்ட ஸ்டாலினின் தான்தோன்றித் -தனமான போக்குகள் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கலாம். இதில் இரண்டு முக்கியமான பாதிப்புகள் நிகழ்ந்திருக்கலாம்.

i) கட்சியினதும் தேசத்தினதும் நிர்வாக ஒழுங்கமைப்பு.

ii) பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம்.

முதலாவதாக, கட்சியின் இந்த இராணுவத் தன்மையான ஒழுங்கமைப்பு எந்த அளவிற்கு முக்கியமானதென்பது ஆய்விற்குரியதே! இரண்டாவதாக சோவியத்தில் புரட்சியின் வளர்ச்சிக்குக் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மன், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றில் உருவாகி -யிருந்த புரட்சிகரச் சூழலை வளர்த்தெடுப்பதற்கு ஏன் கொடுக்கப்படவில்லை அல்லது எந்தளவிற்கு கொடுக்கப்பட்டது என்பதும் ஆய்விற்குரியதே!


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வாறான தவறுகளை விமர்சிக்கின்றோம் என்பதற்காக, ஸ்டாலினின் மாபெரும் தத்துவங்களையும் உலகமக்களுக்கு ஸ்டாலின் ஆற்றிய சேவைகளையும் மறுக்கின்றோம் என்று அர்த்தப்படுத்தக் கூடாது.

இவை தவிர சோவியத்தில் ஏற்பட்ட அரசியல் பொருளாதார மாற்றங்-களுக்கு ஒத்த அதன் கலாச்சார மாற்றங்களையும் கருத்தில் கொள்ள வேண்டும். 'குறிப்பிட்ட எந்தவொரு கலாச்சாரமும் குறிப்பிட்ட சமூகத்தின் அரசியல் பொருளாதார நிலைமைகளின் பிரதிபலிப்பே; ஆனால் கலாச்சாரம், சமூகத்தின் அரசியல், பொருளாதார நிலைமைகளின் மீது பெரும் செல்வாக்கு வகிக்கின்றது.' - மாவோ.

"நாம் ஒதுக்கி அப்புறப்படுத்த விரும்பும் பழைய கலாச்சாரம், நமது நாட்டின் பழைய அரசியல் பொருளாதார அமைப்பில் இருந்து தனித்துப் பிரிக்க முடியாது என்பதும், நாம் உருவாக்க முனையும் புதிய கலாச்சாரமானது புதிய அரசியல், புதிய பொருளாதாரம் ஆகிய-வற்றிடமிருந்து தனித்துப் பிரிக்க முடியாது என்பதும் மிகத் தெளிவாகும். பழைய அரசியலும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பழைய பொருளாதாரமுமே பழைய கலாச்சாரத்தின் அடிப்படையாகும். அதேபோல் புதிய அரசியலும் புதிய பொருளாதாரமுமே புதிய கலாச்சாரத்தின் அடிப்படையாகும்." - மாவோ.

மூன்றும் உலக நாடுகளில் நிலப்பிரபுத்துவ பொருளாதார அமைப்பு நிலவிக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்திலேயே அங்கு ஏகாதிபத்தியங்களால் முதலாளித்துவம் திணிக்கப்பட்டது. அப்போது முதலாளித்துவம் தனக்கே உரித்தான சில முற்போக்கு அம்சங்களை-யும் சேர்த்தே கொண்டு வந்தது. 'எல்லாருக்கும் தொழில் வாய்ப்பு', 'எல்லாருக்கும் கல்வி', 'விரும்பியவர் விரும்பிய உடையை அணிதல்', 'விரும்பிய இடத்தில் விரும்பியவர் வாழுதல்' என்ற கோஷங்களை முன் நிறுத்தியது. குறிப்-பிட்ட சாதியினருக்குக் குறித்த தொழில், குறித்த மேலானோருக்கு மட்டுமே கல்வி என்று ஒழுங்கமைக்கப்பட்ட சமூக அமைப்பானது இந்த ஏகாதிபத்தியங்களின் மேலாதிக்க சுரண்டலுடன் கூடவே வந்த முற்போக்கான அம்சங்களை ஏற்றுக் கொள்ள மறுத்தது. உயர்த்தப்பட்டோர் மட்டுமல்ல, தாழ்த்தப்பட்டோர்களும் இதற்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிர்ப்புத் தெரிவித்தனர். இந்த நிலையில் உருவாகியிருந்த தேவைகளின் அடிப்படையில் சமனான கல்வி வாய்ப்புக்களை எல்லா மட்டத்தி-லிருந்தோரும் பயன்படுத்தினர். ஓரளவு திறமை அடிப்படையிலான தொழில் வாய்ப்புகள் உருவாகின. ஆனால் மீண்டும் பணம் படைத்-தோரிடமே அதிகாரங்கள் இருந்திருந்தன. தீர்மானிக்கும் சக்தியாக அவர்களே விளங்கி-னார்கள். இதனால் முன்னைய நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பின் பிழையான பகுதிகள் அழியாமலும், முதலாளித்துவத்தின் சில பகுதிகளைச் சேர்த்துக் கொண்டதுமான ஒரு கூழான புதிய சமூக அமைப்பு ஒன்று உருவாகியது. இது முற்றிலுமான நிலப் பிரபுத்துவக் கலாச்சார அம்சங்களைக் கொண்டதாகவோ அல்லது முதலாளித்துவக் கலாச்சார அம்சங்களைக் கொண்டதாகவோ இருக்கவில்லை.

புரட்சிக்கு முந்திய சோவியத் யூனியன் முற்றாக முதலாளித்துவம் வளர்ச்சி-யடையாத, முதலாளித்துவம் வளர்ச்சியடைந்து கொண்டிருந்த நிலையில் இருந்தே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு நாடாக இருந்தது. எனவே அது முதலாளித்துவத்தின் முற்போக்கான அம்சங்களைக் கூட அதுவரை கண்டிருக்க-
-வில்லை. நிலப்பிரபுத்துவக் கலாச்சாரத்தில் இருந்து முற்றாக விடுபட்டிருக்கவில்லை. இந்த நிலையில் தான் சோவியத்தில் சோஷலிசப் புரட்சி அரங்கேறியது.

இந்த சோஷலிசப் புரட்சி ஏற்படுத்திய அரசியல், பொருளாதார சமூக மாற்றத்திற்கு ஒத்ததான கலாச்சார மாற்றமும் சோவியத்தில் எந்த அளவிற்கு முக்கியத்துவப்படுத்தப் பட்டது என்பதையும் கருத்தில் கொண்டே சோவியத்தின் தோல்வி சம்பந்தமான ஒரு ஆய்வு பூரணப்படுத்தப் -பட முடியும். முற்றாக முதலாளித்துவம் வளர்ச்சி-
-யடையாத சூழலில் முதலாளித்துவக் கலாச்சாரத்தின் முற்போக்கான அம்சங்களைக் கூடக் கண்டிராத ஒரு மக்கள் கூட்டம் கம்யூனிசக் கலாச்சாரத்தை நோக்கி வளர்த்தெடுக்கப்படும்போது தோன்றக் கூடிய இந்தப் பிரச்சினைகளை நடந்து முடிந்த சில தர்க்கங்கள் கலாச்சார வெளிப்பாடுகளூடாக நாம் காணமுடியும்.

'பெருவீத சாகுபடிக்கு எதிரான விவ-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

-சாயிகளின் தப்பெண்ணம் இன்றும் கூட நீடிக்கின்-
-றது. பெரிய பண்ணை இருக்குமானால் அவன் ஒரு
பண்ணையாளனாகவே மறுபடியும் ஆகிவிட முடியும்
என்று கருதுகின்றான். ஆனால் பெருவீத சாகுபடி
முறை பற்றிய விவசாயியின் கருத்து ஒருவித
பகைமை உணர்ச்சியுடனும் நிலப்பிரபுக்கள்
எவ்வாறு மக்களை ஒடுக்கினார்கள் என்பதன்
நினைவுகளோடும் பந்தமுடையது. அந்த உணர்வு
இன்றும் நீடிக்கின்றது. அது மறைந்து விட-
-வில்லை. இங்கு நிலைமையின் மெய்யியல்பு
காரணமாகவே பலவந்த முறைகளால் எதையும்
சாதிக்க முடியாது என்ற உண்மையைக் குறிப்-
-பாயும் அடிப்படையாகவும் கொண்டு நாம்
செயற்பட வேண்டும்.' —லெனின்.

இவ்வாறான மனநிலைகள் லெனின் காலத்-
-திலிருந்தே சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றன.

இவை தவிர ஸ்டாலின் காலத்தில்
தடை செய்யப்பட்ட OPERA நாடகப்பாணி-
-யிலான இசைகளிலும் அக்கால கட்டங்களில்
உள்ள ரஷ்யத் திரைப்படங்கள் இலவற்றிலும்
பெண்கள் தொடர்பானதும் குடும்பம் தொடர்பா-
-னதும் எனப் பல கலாச்சாரப் பிரச்சனைகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முக்கியத்துவப் படுத்தப்பட்டுள்ளன.

மேலும் லெனின் காலத்தில் 'மூச்சு விடும் நேரம்' என்று வர்ணிக்கப்பட்ட பொருளாதா-ரக் கொள்கை நடைமுறைப்படுத்தப் பட்டது. முதலாளித்துவம் முற்றுக வளர்ச்சியடையாத ஒரு சமூகத்தில் கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இடையிலான வளர்ச்சியின் மட்டத்தில் வித்தியாசம் இருக்கும். முதலாளித்துவச் சந்தையை நோக்கி இறுக்கமாகப் பிணைக்கப்படும் போது இந்த வித்தியா-சங்கள் அகற்றப்படும். இவ்வாறு முதலாளித்துவம் வளர்ச்சியடையாத சூழலில், இந்த வளர்ச்சி மட்ட வித்தியாசங்களை அகற்றும் ஒரு இடைக்காலமாக முதலாளித்துவச் சந்தையின் சில பகுதிகளைத் தொடர்ந்து பேணுதல் என்ற கொள்கை முன்வைக்கப்பட்டது. இதன் தாக்கங்களும் இதன் பிறகு ஸ்டாலினால் முன் வைக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளும் ஆய்விற்குரியனவே!

ஸ்டாலின் மறைவுக்குப் பின்னைய திரிபுவாதக் கட்சிகள் பற்றியும், அதன் தவறான போக்குகள் பற்றியும் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி ஆக்கபூர்வமான விமர்சனங்களை முன்வைத்திருந்த போதிலும், சோவியத்-தின் இந்தத் திடீர் மாற்றம் எவ்வாறு நிகழ்ந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்கக் கூடும் என்பது பற்றி சரியான ஒரு ஆய்வு முன் வைக்கப்படவில்லை.

உபரி தானிய சுவீகரிப்பிற்குப் பதிலாகப் பண்ட வடிவிலான வரியை அறவிடுவது என்ற நடவடிக்கையைப் பின்பற்றிய போது லெனின் பின்வருமாறு கூறுகின்றார் « உலகப்புரட்சி தயக்கமடைவதன் காரணமாக ரஷ்யாவில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நீடித்துப் பேணி வைத்திருப்பது சாத்தியமல்ல. இதை நாம் தெளிவாக உணர வேண்டும். »

இவ்வாறான ஒரு சாத்தியமல்லாத தன்மையை வெற்றி கொள்வதற்காகவே, உபரித் தானியத்தை சுவீகரிப்பதற்குப் பதிலாக, தனிப்பட்ட பரிவர்த்தனையை அனுமதிக்கின்ற பண்ட வடிவிலான வரி விதிப்பு முறையை அரசு ஏற்படுத்திற்று. இது ஒரு இடைக் கட்ட நடவடிக்கையாகவே கைக்கொள்ளப் பட்டது. விவசாயிகளில் பெரும் பகுதியினரான நடுத்தர விவசாயி-களைத் திருப்தி செய்ய வேண்டும் என்று கூறுகிற இந்த அறிக்கை கட்டற்ற பரிவர்த்தனையை அனுமதிப்பதை நியாயப்படுத்துகின்றது.

மேலும் இது பற்றிக் கூறுகையில், 'உபரி சுவீகரிப்பு என்பது எல்லா உபரிகளையும் பறிமுதல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்தலையும் கட்டாய அரசு ஏகபோகம் நிலை நாட்டப் படுவதையும் உணர்த்துகின்றது. நாம் வேறு வழியில் எதையும் செய்ய முடியாது. நமது தேவை மிகவும் மிகுதியானது. தத்துவார்த்த முறையில் கூறினால் சோஷலிசத்தின் நலன்களின் நோக்கு நிலையிலிருந்து அரசு ஏகபோகம் ஆகச் சிறந்த இன்றியமையாத அமைப்பு முறையல்ல' என்கின்றது.

இங்கே உலகப் புரட்சி மேலும் தாமத-மடைந்ததும் லெனினுக்குப் பிந்திய பொருளாதாரக் கொள்கைகளில் அரசு ஏகபோகத்தை அதிகளவு வளர்க்குமளவிற்கு இருந்த பரிவர்த்தனை முறை, விநியோக முறை சார்ந்த குறைபாடுகள் தொட-ர்பான பிரச்சனைகளையும் சோவியத் தொடர்பான ஆய்வில் கருத்தில் கொள்ளப்படவேண்டும்.

1991 ஆண்டு ஆகஸ்ட் 19-ம் திகதியில் இருந்து 61 மணித்தியாலங்கள் மட்டுமே நீடித்த இந்த திடீர் சதி முயற்சி சோவியத்தில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தியிருக்க முடியாத ஒன்றாகும். சோவியத்தில் கோர்பச்சேவ் ஏற்படுத்திய மாற்றத்திற்கு எதிராக மறுபடி கட்சி சார்ந்த ஒரு சில நபர்களின் சர்வாதிகாரத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏற்படுத்த முயன்ற இருவே இச்சதி முயற்சியின் சூத்திரதாரிகளாவர்.

ஆனால் இன்றைய நிலையில் சோவியத்தின் உருக்குலைந்த ஏகாதிபத்தியத் தன்மை வாய்ந்த அரசு தனது இருப்பை நிலை நிறுத்த முடியாமல் போனது இயல்பானதே. இன்றைக்கு சோவியத்தின் பெரும்பகுதி சந்தைகளை அமெரிக்காவும் யப்பானும் ஜேர்மனும் போட்டி போட்டுக் கொண்டு ஆக்கிரமித்து விட்டன.

இன்றைக்கு உலகில் பெரிய பங்குச் சந்தையை யப்பானே கொண்டுள்ளது. உலகின் எட்டுப் பெரிய வங்கிகளில் ஏழு யப்பானுடையதாகும். உலகின் 100 முன்னணி வங்கிகளில் 25 யப்பானுடையதாகும். சோவியத்தின் மூன்றாம் உலக நாடுகளிற்கான ஆயுத விநியோகத்-தின் பெரும்பகுதியை அமெரிக்கா கைப்பற்றியுள்ளது. யப்பானிற்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான இந்த உக்கிரமான பொருளாதாரப் போட்டிக்குள் சோவியத் யூனியன் அடியுண்டு போனதன் ஒரு தவிர்க்க முடியாத விளைவுதான் இன்றைய சோவியத் யூனியன். இதன் வெளிப்பாடு தான் 'பெரஸ்ர-ரொய்கா' வும் 'கிளாஸ்னேவ்' உம், ஐக்கிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஐரோப்பாவும் கூட. ஏற்பாறுடைய இந்த வளர்ச்சி இனிமேலும் பல வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளையும் சோவியத்தின் வறுமை நிலைக்குள் தள்ளி விடலாம்.

லெனின் தலைமையிலான கட்சி ஜேர்மனு--டன் ஒப்பந்தம் செய்வதை எதிர்த்த ட்ரொஸ்கி குழுவினரும் வேறு குழுக்களும் இது உலகப்புரட்சிக்குச் செய்யும் துரோகமென முழங்கினர். இது குறித்து லெனின் விளக்குகையில் உலகில் சோசலிசப்புரட்சி சாத்தியமாகுமெனில் முதலில் ரஷ்யா பாதுகாக்கப்பட வேண்டும் என்கிறார். ரஷ்யா தோல்வியடையுமாயின் அது உலகப்பாட்டாளி வர்க்கத்திற்கு மிகப்பெரிய நம்பிக்கையீனத்தைத் தோற்றுவிக்கும் என்றார். ஆனால் ஸ்டாலின் மறைவுக்குப் பிறகு ரஷ்யா தோல்வியடைந்துவிட்டது. அது கோர்பசேவ் காலத்தில் நடந்தது அல்ல. எனவே இன்றைக்கு இது குறித்து நம்பிக்கை இழப்பவர்கள் வரலாறு குறித்து நம்பிக்கையற்றவர்களாக இருக்க முடியும்.

ஆனால் இன்றைக்கு இத் தோல்வி குறித்து ரஷ்யாவின் உள்ளேயே ஆக்கபூர்வமான கருத்து விவாதங்களும் நம்பிக்கை தரும் முன்னறிவிப்புகளும் ரஷ்யாவினுள் இருந்தே வெளிவருகின்றன. இன்றை--க்குப் பொருளாதார நெருக்கடிக்கு கோர்பசேவ்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

-வைக் காரணம் காட்டி யெல்ஸ்ரினைத் தூக்கி நிறுத்தும் முதலாளித்துவப் பச்சோந்திகளின் நாடகங்கள் நீண்ட காலத்திற்கு நிலைக்க முடியாத அளவிற்கு ரஷ்யாவிலுள் பொருளாதார நெருக்கடிகள் வளர்ந்து விட்டன. பெரஸ்ரொய்க்காவிற்குப் பிறகு ரஷ்யாவின் சந்து பொந்துகளெல்லாம் திறக்கப்பட்ட அமெரிக்கச் சாப்பாட்டுக்கடையான 'மக்டொனல்ஸ்' இல் இன்னும் நீண்ட காலத்திற்குப் பணம் படைத்தவர்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்க முடியாது.

ரஷ்ய மக்கள் அங்கிருந்த அரசுகளிற்கு எதிராகவே கோஷம் எழுப்புகின்றார்கள். கம்யூனிச சித்தாந்தத்திற்கு எதிராக அல்ல.

லெனின் சிலைகள் ரஷ்யாவில் உடைக்கப்பட்ட பிறகு லெனினின் பூதவுடலும் அழிக்கப்படலாம் என்ற பயத்தில் முண்டியடித்துக் கொண்டு அஞ்சலி செலுத்தச் சென்ற மக்கள் கூட்டம் தான் கோர்பச்செவ்வை விடுவிக்கவும் செய்தது.

எப்போது உடைபடுமென ஒரு உடைக்கப்படாமல் கிடந்த லெனின் சிலையைச் சுற்றிப் பத்திரிகையாளர்கள் காவல் நின்றபோது, காரில்

www.tamilarangam.net

வந்திறங்கிய ஒரு பெண் அந்தச் சிலைக்கு மலர்களைத் தூவிவிட்டு 'ரஷ்யர்கள் துரோகிகள் அல்லர்' என்று ஒரு சொற்பொழிவையே ஆற்றிய போது அந்தப் மக்கள் . கூட்டம் மௌனமாகக் கலைந்து சென்றது.

இரண்டாவது மாநிலமான உக்ரேயின் மாநிலத்தின் முதல்வர் 'இந்த ஆட்சி ஜார் ஆட்சிக்கு ஒத்ததே எனக் கூறி அறிக்கை விடுத்தார்.

அமெரிக்க முன்னாள் அதிபர் ஜிம்மி காட்டரின் ஆலோசகர் சிமன் தயூபாசெயிகனி சதி பற்றிக் குறிப்பிடுகையில் "சோவியத்தில் மாநி-லங்கள் பிரிகின்றன. கோர்பச்செவ்வின் ஆட்சி அழியப் போகின்றது. ரஷ்ய சம்மேளனத் தலைவர் பொரிஸ் யெல்ஸ்ரினின் செல்வாக்கு அதிகரிக்கின்றது. சோவியத் யூனியன் அழியப் போகின்றது. விரைவில் புரட்சி ஒன்றை எதிர்பார்க்கலாம். அது மிகவும் ஆபத்தானதாக இருக்கும்" என்று அச்சம் தெரிவிக்-கின்றார்.

கோடிக் கணக்கான கட்சி ஊழியர்களையும் ஒரு சோசலிச வரலாற்றுப் பாரம்பரியத்தையும் கொண்ட மக்கள் கூட்டத்தை சோவியத் யூனியன்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டுள்ளது. திரிபுவாதிகளின் திரிபுகள் எல்லாம் பொருளாதார நெருக்கடிகளைக் கொண்டு வந்துவிட்-டது. இந்த நிலையில் சோவியத்தில் மறுபடி ஒரு புரட்சிக்கான முன்னறிவிப்புகள் கேட்கின்றன. இது வெகு தொலைவில் இல்லையென்றே நம்பலாம்.

இந்த நிலையில் சமூக உணர்வுள்ள ஒவ்வொரு தனிமனிதனும் ஸ்தாபனங்களும் சோவியத் யூனியன் சம்பந்தமான ஆய்வொன்றை தீவிரத்துடன் மேற்-கொள்வது மிகவும் அவசியமானதாகும். அதுவும் செய்திகளைக் கூடிய அளவு சேகரித்துக் கொள்ளக்-கூடிய ஐரோப்பிய சூழலில் வாழ்கின்ற நாம் இதனை எமது எதிர்கால சமூகத்திற்கு வழங்குவது மிகவும் பயனுள்ளதாக அமையும். ஐரோப்பாவில் இருந்து வெளிவருகின்ற 'அரசியல் சஞ்சிகைகள்' இந்தப் பணியினைத் தொடர்ந்து மேற் கொண்டால் நாளைய புதிய சமுதாயத்திற்கு கவிதைகளையும் சிறுகதைகளையும் விட மேலும் வலுவுள்ளதாக அமையும் என நம்புகின்றோம்.

சோவியத் தொடர்பாக மாவோ சேதுங் இன் சிந்தனைக் கம்யூனிஸம் கட்சியும் முன் வைத்த விமர்சனக் கட்டுரை அடுத்த இதழில் வெளிவரும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இது ஒரு [விகடமான] காதல் கதை

அண்ணாவோ ஒரு போக்கிரி (போர்-போக்கோ, மார்போக்கோ யாமறியோம் பராபரமே.)

ஆரணாவிக்கோ அழகு தமிழ் கவிதை சொல்லும் கவிதாயினி. பெண்ணடிமைத்-தனம், சீதனம், சாதிக்கொடுமைகளை தன் த(கு)ரல் மிக்க கவிதைகளால் எதிர்க்க முயல்பவள்.

BARBES METRO வில் ஒருநாள் அண்ணாவும் நோக்க அவளும் நோக்க (புயல் பண்ணும் போது பமேலாவில் வெட்-டப்பட்ட விரக்குறும்புகளையும் கண்டான்.) எவெஸ்ரோனின் சாமான்களைக் கண்ட இந்திய இராணுவத்தானைப் போலவும் அமெரிக்க TOURIST ஐப் பார்த்த அடை-யாளனைப் போலவும் அவசரமாய்க் காதல் வந்தது. தமிழ் படத்தில் வருவது போல காதல் தேவதைகள் பின்னணி-யில் பாடாததால் நொந்து வெண் கொஞ்சியானார் தானம் பாடினார்.

திருமணத்தில் ஒரு சிக்கல்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கதாநாயன் இந்த மரபும் தூய்ய வீரத்த
உயர்வை வேணாளாக் கொடுத்தது.
அண்ணாமலை தாழ்ந்த சாதி. கதாநாயன்
யோசித்தான். (கதையை எழுதும் போது
நானே யோசிக்காமல் எழுதுவான்.)
பார்வை மாறுதலில் பலவகையும் பருவமாய்
இருக்க பக்குவமாய் வழி கண்டான்.
அரசி பணிப்பெண்ணுடன் ஆடிப்பாடியான
அண்ணாவை கொடும்பு ரம்பலாக
அழைப்பிதழில் அனுப்பினான்.

அதை மகிழ்ந்து, அனுப்பிய பாரி-
-த்து ஐயர் கொடுத்த கல்யாணத்திற்குப்
போகும் அவசரத்தில் (சபாநாயகி
வாகனத்தில்) மந்திரம் சொல்லி மங்கல-
-மாய் திருமணம் முடிந்தது.

இக்கதை கதைஞர் கட்டைத்-
-தாசனால் கி.பி 5ம் ஆண்டு பாடப்பட்டது.
(காட்டு கிடைத்த பாண்).

கதைஞர் கட்டைதாசன்
உணர்வுகளுடன்...

www.tamilarangam.net

காதல் அடித்த பாம்பை மீண்டும்
காதல் அடிப்பதில்......

எட்டுத் திக்கும் சென்று கலைச்செல்
-வம் கட்டிக் காத்துக் கொண்டு
வர வேண்டுமென்று பாரதியின்
கனவை நனவாக்கும் பலர் கூடத்
-தவறான எண்ணத்தில் கலைஞர் கட்டைத்
தாண்டுவார்கள் சந்தேகமே கிடையாது.
உதாரணத்திற்கு ஒரு அனுபவம்...

எட்டுத்திசையிலேயும் தெருவோரங்களில்
முதலிடம் பாரிஸில் கடைக்காரர்-
-களுக்கும், கலைஞர்களுக்குமே. அதிலும்
இவர்கள் BOULOGNE காட்டுப்
பக்கத்திலே ஜொலித்தும் கூடுதலாக
தெரிகின்றார்கள்.

ஒரு சர்வதேசக்கடை நடாத்திய
ஆண்டு விழாவிற்கு பாரதத்திலிருந்து
பரதநாட்டியக்குழு ஒன்று வந்திரு
-ந்தது. இச்சர்வதேச கடைக்கும்
கலைக்கும் இடையே சமரிற்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொளுத்திடும் உள்ளது போல் நல்ல நெருக்கமுண்டு. சர்வதேச கடையில் அப்பம், ஆட்டிறைச்சி, வாழையிலை, உலக்கை போன்று நல்ல சாதனங்-கள் யாழ்ப்பாணத்திலிருந்து வரவழைக்-கீடு வந்துள்ளன. பாரிஸில் ஆடு-களில்லா? என்று முட்டாள் தனமாக யாரும் கேட்க கூடாது. அத்துடன் சர்வதேச கடை தொடங்கிய பண-மேலும் எப்படி வந்ததென்பதும் சிறிமேலும், நக்கிமேலும் மாதிரியான ஆய்ந்த சிந்தனைக்குரிய விடயமாக யாரும் கருதக்கூடாது.

இனி விடயத்திற்கு வருவோம், கனடா கிடைத்தாரசனிற்கு எப்படியான தொல்லை வாழ்க்கையிற்கு போவதால் எல்லாப்போர்வையும் வருவதில்லை. நாடு தமிழர்கள் கூடுதல் "மே" "மே" என்று ஆட்டுக் கத்தல் கேட்பதாக அவர்களிற்கு ஒரு நினைப்பு. பாத-மென்றதாயும், ஏசியாவோ ஒரு TICKET கிடைத்ததாயும் கனடாவில்

www.tamilarangam.net

ஒரு திண்ணையிலே குந்தி இருந்தார்.

மறுபடி சிந்தனைகளுடன் பாதம் தொடங்கியது. அதைப்பற்றிய ஒரு முடிவும் காணவில்லை.

யாழ்ப்பாணத்தின் திருக்கைக வாசலில் எதிரிகளை புறமுதுகு காட்டி ஓடச் செய்த வீரத்தமிழ் மறவர் இருவர் பொறுத்தது போதுமென்று வாயால் விரல் வைத்து நாயு வாயால் அடித்து வாசடு சொன்னார். எதிர்ப்புப் பாட்டுக்கு டாலின் ஆராதனைப் பாவின் அர்த்தங்களை பொறுத்துக் கொள்ள முடியாது தமிழ்பாட்டுக்கு ஆரம்பிக்கோ!

> கவனம் கட்டைக்காரன்
> உங்களுடன்....

www.tamilarangam.net

# காத்திருப்பு

ஐந்து சந்தியில்
அகன்ற விழியுடன்
என் கடிதத்தை
எதிர்பார்த்து
காத்திருப்பதாக
எழுதியவளே!

மதத்தின் பேரால்
உன் பாரம்பரிய
குடியிருப்பு
மறுக்கப்பட்டது
தெரியும் - ஆனால்
அதனால் எங்கள்
காதலும் ....?

உன் இருப்பிடச்
சுதந்திரம் மறுக்கப்பட்டு
நீ வெளியேற்றப்பட்ட
பின்
உன் இருப்பிடம்
அறிய ஏங்குகின்றேன்

எந்த அகதி முகாமில்
எந்த
என்று சொல்லி
நான் உன்னைத்
தேடுவேன்

ஏன் உன் கடிதம்
எனக்கு வரவில்லை
ஓ...
உடமைகள்
எடுத்துச் செல்வது
தடுக்கப் பட்ட போது
என்முகவரியும்
உன் உடமைக்குள்
சேர்ந்ததுவோ!

முகவரி தேடி
முகில் போல
அலைகிறேன்
முடிந்தால்
ஒரு கடிதம்
ஒரே ஒரு கடிதம்
உன் கடிதத்திற்காக
காத்திருப்பேன்.

– ஜெகன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அவன் எழுந்து விட்டான்

●

ஆண்டாண்டு காலமாக
அனுபவித்த வேதனைகளிலிருந்து...
எதிரியால் அவன்
வீழ்த்தப்பட்டிருந்த பெரும் பள்ளத்திலிருந்து...
அவன் எழுந்து விட்டான்.

கண்ணிமைகளின் மீது
குருதி கொட்டுகிறது!
விரிந்த மார்பின் மீதும்
குருதி வெள்ளம் ஓடுகிறது.
ஆனாலும் அவன் சிரிக்கிறான்.
இதற்கு முன் என்றுமே அவன்
இப்படிச் சிரித்ததில்லை.
ஜுவாலை பொங்கும் அவனது விழிகள்
அங்கும் இங்கும் அலைபாய்கிறது;
அவனை பள்ளத்தில் வீழ்த்திய
எதிரியைத் தேடி...
அவன் எழுந்து விட்டான்
எழுந்து விட்டால்...அவன்
கொடுவிலங்குகளிலும் வலிமையானவன்!
எல்லா மனிதரையும் விட புத்திசாலியானவன்!
இழந்து விட்ட வாழ்வை
எதிரியின் மரணத்திலிருந்துதான்
பறித்தெடுப்பான்!
அவன்
இப்படித்தான் இருக்க வேண்டும்.

—அய்-குங்

www.tamilarangam.net

# பாராளுமன்றக் கனவுகள்

குடும்ப ஆட்சி, தனி மனித சர்வாதிகாரம் ஆட்சி வடிவங்களாக பல நாடுகளில் நடந்தன. நடக்கின்றன. இதில் நமது நாடும் விதி விலக்கல்ல. இச் சர்வாதிகாரிகள் முதலாளித்துவ ஜனநாயக உரிமைகளைக் கூட அளிக்க மறுப்பதால் இங்கே வர்க்க சார்பின்றி மக்கள் போராட வேண்டிய நிர்ப்பந்தம் இயல்பாகின்றது. இச் சூழ்நிலையின் முரண்பாட்டை தெளிவான நெறிப்படுத்தலினூடாக அரசை நோக்கிப் போராடும்படி மக்களை வழி நடத்த தேச விடுதலைக் கட்சிகள் காத்திருப்பதும், சூழ்நிலையைப் பயன்படுத்தி இக் கட்சிகள் தேசத்தின் விடுதலையில் கணிசமான முன்னேற்றம் அடைகின்றனர் அல்லது அடுத்த கட்ட நகர்வுக்கு அனுபவத்தை பெறுகின்றனர். என்பதைப் பல நாடுகளின் வரலாறு நமக்கு உணர்த்தியுள்ளது.

நமது தேசத்தைப் பொறுத்தவரையில் தேச விடுதலை பற்றிய நோக்குள்ள முனைப்புகள் ஆங்காங்கே உதிரியாயிருப்பது நமக்குத்

www.tamilarangam.net

தெரிகின்ற போதிலும், தற்போதைய அரசுக்குள்-
-ளும், பாராளுமன்றத்திலும் ஏற்பட்டிருக்கும்
முரண்பாட்டால் வெளிவந்து கொண்டிருக்கும்
கொலைகளையும், தேசத் துரோகத்தையும், சர்வாதி-
-காரத்தின் உச்சநிலை ஆட்சியையும், நாட்டின்
கடைசிக் குடிமகனும் ஆளும் கும்பல் பற்றி
அறிந்து கொண்ட இவ்வேளையில், இம்முரண்-
-பாட்டைப் பயன்படுத்த எந்தவொரு தேச
விடுதலை ஸ்தாபனமும் இல்லாதிருப்பதை
விடுதலையை நேசிக்கும் அனைத்து ஜனநாயக
சக்திகளும் உணர வேண்டிய நேரமிது.

இலங்கையின் தொடர்ச்சியான சிங்களப்
பேரினவாத ஆட்சியால் இன முரண்பாடு கூர்மை-
-யடைந்துள்ள இவ்வேளையில் ஜனாதிபதி ஆட்சி
முறைக்கெதிராகவும், பிரேமதாசா மீதான
அரசியல் குற்றப் பட்டியலையும் சி.சு.க., ல.ச.ச.க.,
ம.ஐ.மு., ஐ.சோ.மு., ஈ.ம.வி.மு., இ.தொ.கா.
ஆகிய கட்சிகளோடு இணைந்து U.N.P. யின்
முக்கிய தலைவர்களான காமினி திசாநாயக்கா,
லலித் அத்துலத்முதலி ஆகியோர் உட்பட
46 U.N.P. உறுப்பினர்களும் கையெழுத்திட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சபாநாயகரிடம் சமர்ப்பித்ததற்கான அரசியல் பின்னணியை ஆராய்வது அவசியமானதே. J.R. ஜனாதிபதியாக இருந்தபோது கட்சிகளின்-ஞம் பாராளுமன்றத்திலும் இரண்டு சம எண்ணிக்கையுள்ள இடங்கள் J.R. இற்கும் பிரேமாவுக்கும் இருந்தது. பிரேமாவுக்கு அப்-போது நாட்டின் தலைவர் என்னும் பதவி இல்லாமலிருந்த போதிலும், நடுத்தர வர்க்க-த்தையும், அதற்குக் கீழ்ப்பட்டோரையும் கவரும் தன்மை கொண்ட சிங்களப் பேச்சும், தனது வளர்ச்சிக்காக அவர் உழைத்த சளையாத சாகச உழைப்புமேயாகும்.

இதன் நிமித்தம் J.R. அரசில் பிரதமர் பதவியும், பின்னர் ஜனாதிபதி வேட்-பாளராகவும் J.R. உம் கட்சியும் விரும்பியோ விரும்பாமலோ அனுமதிக்க வேண்டியேற்பட்டது. என்றால் அது மிகையாகாது. (பிரேமதாசாவின் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட J.R., தொலைக் காட்சியில் நாட்டு மக்களுக்காகப் பேசிய பேச்சில் U.N.P. க்கு வாக்களியுங்கள் என்று கேட்டுக் கொண்டதாகவும், பிரேமதாசா என்னும் பெயரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

உச்சரிக்காமலே அதிருப்தியைக் காட்டியதா-
-கவும் கூறப்படுகின்றது.) கட்சியில் அனுரவா-
-சிப்பேரும் J.R. இடமும் தனக்கு நேரெதிராக
முன்கூட்டியே இயங்குவதை அறிந்துகொண்ட
பிரேமதாசா, பாராளுமன்றத் தேர்தலா ஜனாதிபதித்
தேர்தலா முதலில் நடத்துவது என்னும் இழுபறி
-யில், ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடத்தப்-
-பட வேண்டும் என்பதில் உறுதியாயிருந்து,
அனைத்து அதிருப்தியாளர்களையும் தனது
வெற்றிக்காக உழைக்க வேண்டிய சூழ்நிலையை
ஏற்படுத்தினார் என்பது சரியானதே.

J.R. இடமில் இருந்த லலித், காமினி
ஆகியோருக்கும் பிரேமதாசாவுக்கும் கொள்கை-
-வாத முரண்பாடும், சமூக முரண்பாடும்
இருந்த போதும் குறைந்த பட்சம் பிரதமர்
பதவியையாவது எட்டிப் பிடித்தால் அடுத்த
கட்டம் நாட்டின் தலைவர் பதவிக்குத் தாவி
விடலாம் என்று காத்திருந்தோர் மிகவும்
ஏமாந்து போயினர்.

J.R., பிரேமா ஆகியோரின் சிங்களப்
பேரினவாத, மேற்கத்திய பொருளாதார ஆட்சி

www.tamilarangam.net

அமைப்பு முறையில் சகல உடன்பாடுகளும் உள்ள லலித் குரு, அதிகாரத்தில் பங்கோ, எதிர்கால வாரிசு என்னும் இடமோ, கிடைக்-காததால், பாராளுமன்றத்திற்கு அதிக அதிகாரம் தேவை, ஜனாதிபதி ஆட்சிமுறையின் கீழ் அதிகாரம் ஒரு தனிமனிதனிடம் போய் விடுகின்றது; இங்கே ஜனநாயகம் இல்லை, சர்வாதிகாரம் நடக்கின்றது என்று சந்தர்ப்ப-வாதத் தனத்தோடு கூச்சலிடுவது மக்களின் அறிவு பற்றி அறிந்து கொள்ளாத கேலி அரசிய-லாகும்.

இலங்கையின் சிங்கள அரசியல் தலைமைகள் அனைத்தும் அரசு மாற்றம், தேர்தல் பிரச்சாரம், புரட்சி, கட்சியின் தலைமை மாற்றம், எதுவாக இருந்தாலும் இனவாதம் பேசிச் சாதிப்பது மரபுவழிச் செயல் போன்றே பேசிச் சாதித்துள்ளனர். இதே வழிமுறையை நழுவ விடாது லலித் குழுவினர் இப்போது அதிகாரப் போட்டிக்குப் பயன்படுத்துவது இவர்களின் அரசியல் மரபாக இருந்த போதிலும் தொடர்ந்தும் இனங்களுக்-கிடையிலான விரிசலையும் தேசிய இனங்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உரிமைகட்கெதிராகவும் எடுக்கும் நடவடிக்கையாக அனைத்து மக்களும் இவர்களை இனம் காண வேண்டும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகார வரம்புகளைத் தீர்மானிப்பதில் J.R. தன்னோடு ஏற்படுத்திக் கொண்ட குழுவில் பிரேமதாசா, லலித், காமினி ஆகியோரை இச் சூழ்நிலையில் குறிப்பிடத் தக்கவர்களாகக் கருதலாம்.

J.R. தலைமையில் நடந்த பௌத்த சிங்களப் பேரினவாத அரசில் அதிமுக்கியமாக சுயநிர்ணய உரிமை கோரும் தமிழ்த் தேசிய இனத்தை ஒடுக்கக் கூடிய சட்டங்களும் தொழிலாளர்கட்கும், பத்திரிகையாளர்கள், எதிர்க் கருத்துள்ளோரை ஒடுக்கும் சட்டங்களும் (6வது திருத்தச் சட்டம்) இயற்றப்பட்டதோடு, இவர்கட்கெதிராக அரச இயந்திரமும் படைகளும் முடுக்கி விடப்பட்டன. வேலை நிறுத்தம் செய்யும் உரிமை ரத்து. (ரயில்வே தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ததால் 40,000 பேர் வேலை இழந்தனர்.) அப்பாவித் தமிழ் மக்கள் மீது குண்டு வீசித் தாக்கி பல்லாயிரம் பேரைக்

www.tamilarangam.net

கொன்றொழித்தமை, தமிழ்ப் பிரதேசங்கள் மீது திட்டமிட்ட குடியேற்றங்களை நடத்திய போதெல்லாம் பாராளுமன்றத்தில் எந்த வித விவாதங்களோ சிறுபான்மைத் தேசிய இனங்-களின் சுயமான முடிவுகளோ அறியாமல் ஜனாதிபதி செயலகம் காலால் இட்ட பணியை தலையால் செய்து முடித்த குழுவினர் தான் தற்போது ஜனநாயகத்துக்காக இனவாதம் பேசுகின்றனர் என்பதை நாம் உணர வேண்டும்.

அதன் பின் வந்த பிரேமதாசாவின் தலைமையின் கீழும் தெற்கில் பல்லாயிரம் இளைஞர்கள் பழைய ரயர்கட்கு இரையாகி-யவை (M.P) சரத் முத்தட்டுவேகம படுகொலை செய்யப்பட்ட போதும், றிச்சர்ட் டீ சொய்சா கொலை செய்யப்பட்டபோதும், பிரேமதாசா-வின் வேண்டுதலுக்காக L.T.T.E. யினர் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் போன்றோரை கொலை செய்த போதும், ரோகண விஜயவீர, கமநாயக்க போன்றோரைக் கொலை செய்த போதும், விஜய குமாரதுங்க கொலை செய்யப்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

-பட்ட போதும் இவ் ஆளும் கும்பல் கருத்தொருமித்தவர்களாகவே இருந்தனர்.

பாராளுமன்ற ஆட்சி அமைப்பில் சிறு-பான்மைத் தேசிய இனங்களின் கருத்துகள் கணிசமான அளவு செயல் வடிவம் பெறமல் போனபோதும் முக்கியமான விடயங்களில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி அமைப்பு முறை, சிறுபான்மைத் தேசிய இனங்களின் அபிலாசைகளை பூரணமாக நிராகரிக்கும் தனிமனித பலம் கொண்டவை. என்பதில் லலித் கூட உட்பட அனைத்து ஆட்சி-யாளர்கட்கும் மறைமுகமான திருப்தி அப்போது இருந்ததை நாம் மறந்து விடலாகாது.

சிறுபான்மைத் தேசிய இனங்களின் எதுவித நலனையும் கவனத்திற் கொள்ளாது இனவாதிகள் தொடர்ந்தும் இனவாதத்தையே பேசும் போதும் E.P.R.L.F. இனர் தொடர்ந்தும் தங்கள் இந்திய எஜமானர்களின் கட்டளைப்-படியே நடந்து கொள்வது ஒன்றும் புதிதல்ல.

www.tamilarangam.net

பிரேமதாசா மீதான அரசியல் குற்றப் பட்டியலை விவாதத்திற்கெடுத்து நிட்சயம் விவாதிக்கப் போவதாகச் சூளுரைத்த சபாநாயகர் M.H.M. மொகமட், சட்டமா அதிபரின் ஆலோசனை தன்னைக் கட்டுப்படுத்தப் போவதில்லை என்று ஜனாதிபதிக்கு மூன்று கடிதங்களையும் அனுப்பி உறுதியாயிருந்தார்.

பிரேமதாசாவின் அதிரடி அரசியல் நடவடிக்கையின் வெள்ளோட்டமாகத் தொண்டமானைத் தூதனுப்பியவுடன், சபா-நாயகருக்கு அரசியலமைப்பும், பாராளுமன்ற ஒழுங்கு முறையும் மறந்து உயிர் பற்றிய பயம் வந்து விட்டது போலும்...... சட்டமா அதிபரின் ஆலோசனையை ஏற்று மனு காலாவதியாகி விட்டதாக அறிவித்துள்ளார். அரசியல் அமைப்புச் சட்டம், பாராளுமன்ற மரபு அனைத்தையும் பிரேமதாசா தன்முன் மண்டியிட வைத்துள்ளார் என்பது சரியானதே.

பிரேமதாசாவின் மனித உரிமை மீறல், அரசியல் குற்ற நடவடிக்கை, அதிகாரத் துஷ்பிரயோகம், படுகொலைகள், லஞ்ச ஊழல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆகியவை அனைத்தும் அம்பலத்திற்கு வந்து..
-ள்ள இவ் வேளையில், இந்த அதிருப்தி
நிலையை வென்றெடுத்து தனது பதவியையும்
அரசையும் நிலைக்க வைக்க, தமிழ் மக்கள்
மீதும் கூடாநாட்டின் மீதும் உக்கிரமான
ராணுவத் தாக்குதலில் ஈடுபட்டுள்ளார்.

இந்த நடவடிக்கையால் ஏற்படும்
அப்பாவித் தமிழ்மக்களின் கொலைகளைக் கண்டு
சிங்கள மக்கள் திருப்தியடைவார்களானல்
அவர்கள் வரலாற்றில் இடம் பெறுவதோடு
பிரேமதாசாவின் அரசும் நீடிக்கும்.

ஒரு மாபெரும் சர்வாதிகாரி நமது
நாட்டை ஆண்டு கொண்டிருக்கும் இவ்வேளையில்
தமிழ் மக்கள் முற்று முழுதாக அரசியலில் இருந்து
ஒதுக்கப்பட்டேயுள்ளார்கள்.

கடுமையான போர்ச்சூழலில் வாழும்
இன்றைய தமிழ் மக்களின் வாழ்நிலையில் இருந்து
ஒப்பீட்டு ரீதியாகப் பார்க்கும் போது, சிங்கள
மக்கள் ஓரளவு அமைதியான சூழ்நிலையில்
வாழ்கின்றார்கள் என்றே சொல்லலாம். இதைத்
தமிழர்கள் வாழும் போர்ச் சூழலில் ஏற்பட்டுக்

www.tamilarangam.net

கொண்டிருக்கும் பொருளாதார அழிப்புகளை கவனத்திற் கொள்ளாது, இனவாத ராணுவத்-தினாலும், பாசிச இயக்கங்களாலும் கொல்லப்-பட்ட அப்பாவித் தமிழ்மக்களினதும் போராளி-களினதும் மொத்த எண்ணிக்கையிலும் பார்க்க ஒப்பீட்டளவில் இருமடங்கு சிங்கள இளைஞர்களை பிரேமதாசா அரசு குறுகிய காலத்துக்குள் கொன்றொழித்ததை நாம் அனைவரும் அறிவோம். இது எப்படி நடந்தது. இவ்வளவு மனித உயிர்-களையும் எதிர்யுத்தம் புரியாமலே பலி கொடுக்க வேண்டிய பிற்போக்குத் தனமான ஏற்பாட்டிற்கு காரணமாயிருந்த சக்திகளின் அரசியல் பின்னணி என்ன என்பதை ஆராய்வதை சற்று ஒதுக்கி வைத்து நோக்குமிடத்து, அரசின் ஒடுக்குமுறைக்-கெதிரான போர்க் குணம்சம் கொண்ட அனைத்து சக்திகளையும் அழிப்பதில் ஆளும் வர்க்கம் கட்சி பேதமின்றி ஒருமித்திருந்ததை நிரூபிக்க அச் சூழ்நிலையில் அனைத்துக் கட்சியின் சலனமற்ற மௌனம் ஒரு சான்று.

சூழ்நிலைக்கேற்றவாறு கதை சொல்லும் பிரேமதாசா நிலப்பிரபுத்துவ சமூகம், வர்க்க

www.tamilarangam.net

முரண்பாடுகள் பற்றியெல்லாம் பேசத் துவங்கி இருப்பதை நோக்குமிடத்து இலங்கை மக்களை வெறும் கால் நடைகளென எண்ணுகின்றார் போலும்.

தற்போது பாராளுமன்றத்திலும் வெளியேயும் உள்ள அனைத்துப் பிற்போக்குக் கட்சிகளும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் தங்கள் வர்க்க நலன் கருதியும், இரு நலனுக்காகவும் உழைக்கும் மக்களை காட்டிக் கொடுத்து வந்துள்ளதோடு இன முரண்பாடுகளையும் கொதி-நிலையிலேயே வைத்திருப்பதை விரும்புகின்றது.

ஆகவே, இன முரண்பாடுகளுக்கு மூல காரணியாயுள்ள அனைத்து அம்சங்களையும் உழைக்கும் மக்களைக் கூறு போடவும் வர்க்க ரீதியான ஒருமைப்பாடு ஏற்படாமலும் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே பயன்படுத்துகின்றனர்.

ஆகவே, தமிழ் மக்களின் தேசவிடுதலைப் பாதையில் ஏற்பட்டிருக்கும் பிரழ்வுச் சூழ்நிலையை-யும், அந்நிய சக்திகளின் தலையீட்டையும், சிங்கள முற்போக்கு சக்திகளும் உழைக்கும் மக்களும் தமிழ் மகனின் தோல்வியாகப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்க்காது சமூக பொருளாதார அரசியல் நோக்கோடு அணுக வேண்டும். அப்போதே ஒடுக்குமுறைக்கெதிரான இப் போராட்டத்தில் அனைத்துப் பாசிசத்தையும் வென்று உழைக்கும் மக்களுக்காகிய தமிழீழத்தின் அடித்தளத்திலே முழு இலங்கையின் உழைக்கும் மக்களுக்காகிய விடுதலையை வெல்ல முடியும் என்று கூறக் கூடிய கால கட்டத்தில் நாமுள்ளோம். இந் நாள் வரும்வரை இவ் ஆட்சியாளர்களின் அரசியல் நாடகங்களை நாம் பார்த்தேயாக வேண்டும்.

இவ் வேளையில் சமகால புதிய அரசியல் முனைப்புகள் பற்றியும் கவலை கொள்ளாமல் இருக்க முடியாது.

இனவாத அரசு, சீனச் சோசலிச அரசின் ஆயுதத்துணை கொண்டு விடுதலை கோரும் தமிழ் மக்களை அழிக்கும் இக்காலத்தில் பீக்கிங்கில் உள்ள தங்கள் எஜமானர்களைத் தட்டிக்கேட்க வக்கற்ற புதிய ஜனநாயகக் கட்சியினர், கொழும்பிலே (சீனச்சார்பு) கம்யூனிசக் கூடாரம் அடித்து விட்டு, ஐக்கிய முன்னணி அமைத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

S.L.F.P. யை ஆட்சிக்குக் கொண்டு வர ஐரோப்பிய நாடுகளில் பிரச்சாரம் செய்யும் இவர்கள், தற்போது நடந்த பாராளுமன்றப் புரட்சியைக் கண்டு திகைத்திருக்கக்கூடும். அடக்கப்படுபவர்களல்ல.

• —— •

ஏன் இப்பிரிவு?
ஏன் இக்குரோதம்?
சிங்களன் என்றும் தமிழன் என்றும்
சிறந்த முஸ்லிம் நானே என்றும்
ஏன் உனைப் பிரிந்தீர்?
வடக்கிலிருந்து வந்துள்ள மனிதா!
தெற்கிலிருந்து திரும்பிய மனிதா!
கிழக்கிலிருந்து தோன்றிய மனிதா!
கேளீர்! இதனைக் கேளீர் இதனை.
வடக்கேயிருந்து வந்துள்ள உனக்கும்
தெற்கேயிருந்து திரும்பிய உனக்கும்
கிழக்கேயிருந்து தோன்றிய உனக்கும்
சேர்ந்துள்ள பிரச்சனை ஒன்றே! ஒன்றே!!
நீங்கள் மூவரும் உழைக்கும் மக்கள்
நீங்கள் மூவரும் கஷ்டப்படுவோர்
நீங்கள் மூவரும் துயருடையீர்!
நீங்கள் மூவரும் துன்பம் என்ற
வாடைக் காற்றில் துவண்டுள்ளீர் அறிவீர்!
காலையில் கழனியில் காடுகள் உழைத்தும்
கடற்கரையெல்லாமே மீன் கொணர்ந்தும்
ஆலைகள் தோறும் வியர்வை வடித்தும்
ஐய! நீர் மூவரும் கண்டது என்ன?
மூவருக்கும் உழைப்பும் ஒன்றே
மூவருக்கும் பிரச்சனை ஒன்றே
மூவரும் உங்கள் எதிர்காலத்தையும்
மூவரும் நம் மக்கள் எதிர்காலத்தையும்
எண்ணி எண்ணி ஏங்குகிறீர் அறிவேன்.

- 'மௌனகுரு' -

www.tamilarangam.net

# ஒரு பதிலுக்காக...

●

அதிர்ந்து கர்ஜிக்கின்றது
போர் முரசு.

மனிதச் சதைகளை
இரும்பு ஆயுதக் கருவிகள்
பலி கேட்கின்றன.

எல்லா தேசங்களில் இருந்தும்
அடிமைகள் பின்னால் அடிமைகள்!
எந்த ஆயுதக் கருவிகளை
இயக்கும் போது,
முன்பு மனிதர்கள் செத்து மடிந்தார்களோ
அதே ஆயுதக் கருவிகளை
இயக்க
இவர்கள் வருகிறார்கள்.
ஏன்? எதற்காக?

ஆடைகளற்று
பசித்துக் கிடக்கும்
இந்தப் பூமி
பயத்தால் நடு நடுங்குகிறது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனித உடல்கள்,
ரத்தக் குளியலில்
நுரைத்துக் கரைகிறது.
ஏன்?
எங்கோ யாரோ
அல்பேனியாவின் ஒரு பகுதியை

அடைவதற்காக —
இவ்வளவும் நடக்கிறது.
பூமியின் மேல்
அடி மேல் அடி
இடியாய் விழுகிறது —
அதன் உள்சதைகளெல்லாம் கிழியும்படி.

மொத்த மனித இனத்தின்
அழுகைக் குரல்
ஓலமாக ஒலித்துக் கொண்டிருக்கிறது.
ஏன்? எதற்காக?
டார்னஸ் வழியாக
கட்டணம் ஏதும் செலுத்தாமல்
கடந்து செல்ல!

இது,
இப்படியே நடந்து கொண்டே போகுமேயானால்
பூமியின்
எந்த எலும்பும் மிஞ்சப் போவதில்லை,
பூமியின் ஆத்மாவைக் கூட
அடித்து, கிழித்து
வெளியே எடுத்து
நார் நாராக்கி விடுவார்கள்.

65



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏன்? எதற்காக
எவரோ
மெசபடோமியாவின் செல்வத்தை
அள்ளிச் செல்வதற்காக!

எந்தப் பெயரில்
எதற்காக
போர்க் குதிரையின் குளம்படிகள்
நகரங்களை செவிடாக்குகின்றன?

போர்க்களமென்னும் வானத்தில்
எது இருக்கிறது?
என்ன தெரிகிறது?
விடுதலையா? கடவுளா?
பணம்.

நீ உயிரிழப்பதைத்தான்—அவர்கள்
தியாகம் என்று சொல்லித் திரிகிறார்கள்.

நீ என்றைக்கு
உன் முழு வலிமையோடு நிமிர்ந்தெழுந்து,
அவர்கள் முகத்தில் அறைந்தாற் போல்
இந்தக் கேள்வியைக் கேட்கப் போகிறாய்:

''ஏன் நாங்கள்
போரிட்டுக்
கொண்டிருக்கிறோம்?''

—மாயகாவஸ்க்கி
ரஷ்யக் கவிஞர்

36

www.tamilarangam.net

தொடர்பு முகவரி !

"SAMAR"
BOITE - 188
BAT E
150 RUE LEOPOLD RECHOSSIERE
93300 AUBERVILLIERS
FRANCE

சந்தா அனுப்ப வேண்டிய தபாற் கணக்கு

2.674.73 M

CENTRE DE CHEQUES POSTAUX
75900 - PARIS CHEQUES
FRANCE

சந்தா விபரம்

| | | | |
|---|---|---|---|
| பிரான்ஸ் | 6 பிரதிகள் | 60 | F.F |
| | 12 பிரதிகள் | 120 | F.F |
| ஐரோப்பிய நாடுகள் | 6 பிரதிகள் | 100 | F.F |
| | 12 பிரதிகள் | 200 | F.F |
| ஏனைய நாடுகள் | 12 பிரதிகள் | 225 | F.F |

வாசகர்களே!

உங்களது ஆக்கங்களையும் விமர்சனங்களையும் எதிர்பார்க்கின்றோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## புலம் பெயர்ந்தவர்கள் பார்வை.....

- புலிகள் -

பெற்ற தாயினை எட்டி உதைப்பது போல
தாயகம் தீயால் எரிகையில் ஓடிட்டு
விமானத்தில் ஏறி பறந்தவர்
வீரம் இல்லாதவர் நாயிலும் கீழானவர்
சாதி வளர்த்தனர் ஜாதிகளாய் படையானர்
கட்டுக் கதையவர் என்ற பயத்தினால்
ஓட்டப் பார்த்த கோழைகள் நாளையே
வீடு திரும்பினால் காறியே துப்புவோம்.
கப்பல் ஏறி ஜேர்மன், பிரான்சில் உடன்
கனடா நாட்டிலும் தஞ்சம் புகுந்தனர்.
அப்பு ஆச்சியை கனவாம் கவலையாம் என்று
அநாதைப்படுத்தியே கடிதம் எழுதினர்.
தப்பாய் பறந்தவர் தம்பியும் வாவென
தப்பாமலேயும் அங்கு அழைத்தனர்.
தப்புக் கெட்டவர் அகதி வேடத்தில்
தாசு சுட்டியே காசு பறித்தனர்.
ஓடியவர் ஓடட்டும் உழைச் சதையர்
எல்லாம் பேடியர்கள் ஓடட்டும் போனவர்
போகட்டும். பாயிலாசித்தால் போதும்
பகுத்துணர்ந்திடும் இவர்கள் எல்லாம் நாய்சாதி
நாய்ச்சாதி ஒரு நக்கிப் பிழைக்கட்டும்
தப்பாய்ப்பறந்து தமிழன் என்று சொல்ல வெட்கி
சுவிஸிலே ஏறி கனடாவில் நக்கட்டும்
மானமுள்ள வாலிபரே வாருங்கள்!

நன்றி : விடுதலைப்புலிகள் எம் மண்ணில்
நடத்திய நிகழ்ச்சி கையேட்டிலிருந்து...